# ண்ணன்

1-10-58

13 ந.பை

212

212



OFFICE OF THE ... STRA...
14 OCT 1958

# கண்ணன் தபால்கள்

5-10-58 அட்டைப்படம் அருமையாக இருந்தது. சுதந்தரப் பறவை வெரிகுட்! கறுப்புக் கண்ணாடி சுவாரஸ்யமாகச் செய்கிறது.

—ஆர். கோபிநாதன், அம்பத்தூர்.

... ஜோவலன்வாஸைப் பாராட்டிவிட்டு, அதைப் பிறரே உணர்ந்து கொள்ளும் உரைகல் போல அவருடைய கட்டுரை ஒன்றையும் பிரசுரித்திருக்கிறீர்களே, உங்கள் திறமையையும் உள்ளன்பையும் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் ரிப்ளை கார்டு எழுதினால்கூட பதில் எழுதாத உங்களை என்ன செய்வது என்று தெரியவில்லை.

—இரா. ஐயராமன், தில்லை,

'கோபதி'யின் பாரதியாரும் தங்கமணியின் மாயக் குரலும் முதல் தரமாக இருந்தன.

—ப. விஜயலக்ஷ்மி, நல்லமாங்குடி.

எ. ந. கணபதி அவரையே பிள்ளையாராக வைத்துக் கவிதையை எழுதிவிட்டார்.

—இளம்பூரணன், சென்னை 17

கணபதியாரைக் கணபதியே வர்ணித்து விட்டார்!

—ஆ. சீனிவாசன், அக்கியம்பட்டி.

விசித்திரக் கனவு ப...

—வீ. ஐயராமன், பம்பாய் 19

காளிகோட்டை ரகசியம் விறுவிறுப்பான கட்டத்தில் உள்ளது. நீங்களும் நானும் பகுதிக்கு அதிகப் பக்கம் ஒதுக்குங்கள். 'கையெழுத்தும் தலையெழுத்தும்' என்பதை வேறு உருவத்தில் நான் முன்னரே படித்திருக்கிறேன்.

—சி. அரிதேவன், கும்பகோணம்

சுதந்தரப் பறவை ஒரு சிறந்த கற்பனைக் கதை

—ஆ. சுப்பிரமணியம், ஒரத்தநாடு.

கையெழுத்...ம் தலையெழுத்தும் மகா மட்டம். அண்ணன் கடிதங்கள் நன்றாக இருக்கிறது.

—வி. சந்தர் அடையாறு.

நான் சில கண்ணன் வெளியீடுகளைத் தீபாவளிப் பரிசாக வாங்க வேண்டும்.

—சேகு. கென்னியப்பன், சேடப்பாளையம்.

காலம் சொல்லும் கதையைப் பாராட்டிய சுகந்தனின் சுதந்தரப் பறவை படிக்கப் படிக்கத் தெவிட்டாத தமிழ் நடை கொண்டது.

—ச. ஆ. கேசவன், கழுகாசலபுரம்.

காளிகோட்டை ரகசியத்தில் படத்துக்கும் சம்பவத்துக்கும் சம்பந்தமில்லை. அண்ணன் கடிதம் பிரமாதம்.

—வளர்பிறைப் படிப்பகம், பாளையங்கோட்டை

'இந்தியன் பங்சுவாலிடி'ப்படி கண்ணன் வெளிவருகிறது போலும்! அண்ணன் கடிதம் காலம் சொல்லும் கதை இரண்டுமே பயன்தரும் பகுதிகள்.

—கி. சீதாராமன், ஓசூர்

அஸ்ஸாமைத் தவறுதலாக மேற்கு எல்லை என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே! கிழக்கு எல்லை என்று திருத்தம் வெளியிடுங்கள்.

—சி. சுப்பிரமணியன், காட்டூர்.

கண்ணன் தாமதமாக வருவதால் எங்கள் கருத்துக்களைக் காலத்தில் எழுதியனுப்ப முடியவில்லை.

—நஜிமுல் ஹுஸேன், கொழும்பு 13

அட்டைப்படக் கதை வெளியிட்டால் நலமாக இருக்கும். ஜோவலன் வாஸ் அறிமுகம் பிரமாதம். ஆனால் அதே இதழில் அவருடைய நல்ல கதை ஒன்றைப் பிரசுரித்திருக்கக் கூடாதா?

—பொ. வீரையன், சின்னாளப்பட்டி.

எழுத்தாளர் அறிமுகம் இன்பம் பயக்கும் பகுதி.

—ஜே. எம். சாலி, குடந்தை,

ஜா யார் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது.

—எஸ். வரதராஜன், பங்களூர் சிடி.

காளிகோட்டையும் கறுப்புக் கண்ணாடியும் கண்ணனின் கண்கள்.

—எி. பாலன், கோளை.

மலர் 9 இதழ் 19

1—10—1958

# குழந்தைகளே !

கண்ணன் உங்களுக்காகவே நடத்தப்படும் பத்திரிகை. உங்கள் மகிழ்ச்சியே கண்ணனின் லட்சியம். உங்கள் ஒவ்வொருக்கும் கண்ணன் வளர்ச்சியில் பங்கு உண்டு. உங்களுடைய சொந்தப் பத்திரிகையாகவே கண்ணனைக் கருதலாம். உங்களுக்குப் பிடித்த விஷயங்களைப் பாராட்டலாம்; பிடிக்காதவற்றை ஒளிவு மறைவு இன்றிக் கண்டிக்கலாம். நண்பர்களோடு பழகுவது போல் கண்ணனோடு நீங்கள் பழக வேண்டும்.

உங்களுக்குத் தோன்றுவதையெல்லாம் எழுதுங்கள். நீங்கள் பார்த்துச் சுவைத்ததையெல்லாம் எழுதுங்கள். அதேபோல உங்களைக் கலக்கும் சங்கடங்களையும் எழுதலாம். நீங்கள் எழுதுபவைகளைத் தமிழ் தெரிந்த ஆண்-பெண் குழந்தைகள் அனைவரும் படிப்பார்கள். அவர்களுக்குத் தோன்றுபவைகளை அவர்களும் எழுதுவார்கள். இவ்வாறு நீங்கள் ஒருவருக்கு ஒருவர் மனம் விட்டுப் பழகக் கண்ணனைப் பயன் படுத்திக் கொள்ளுங்கள்.

கண்ணன் தீபாவளி மலர் ஜாம் ஜாம் என உருவாகிறது. கண்ணன் விடுமுறைத் காலப் பரிசுபெற்ற போட்டியின் முடிவும் கதை, கட்டுரை கவிதை, சித்திரங்களும் மலரில் வெளிவரும். கண்ணன் மலர் என்றால் எப்போதுமே அதற்கு ஒரு தனி மதிப்பு உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். இதன் விலை ஒரு ரூபாய்தான். மற்ற விவரங்களை அடுத்த இதழில் பாருங்கள்.

—ஆசிரியர்.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.



பாரதி தங்கராசன்

திருச்சியில் வளரும் எழுத்தாளர் சங்கம் என்று சென்ற ஆண்டு தோன்றி இன்று சிறப்பான பணி புரிந்து வருவதற்குக் காரணமாக இருப்பவர்களில் நண்பர் தங்கராசனும் ஒருவர். தஞ்சையிலே பிறந்து, பொன்மலையிலே வளர்ந்து, திருச்சியிலே கல்வி பயின்ற இவர் நாளுக்கு நாள் தரத்தில் வளர்ச்சியுற்று வரும் அந்த எழுத்தாளர்களின் சங்கத்துக்குத் தலைவராக இருந்து வருகிறார். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பலர் அறிவு வளர்ச்சியையும் அநுபவ வளர்ச்சியையும் கொண்டு அற்புதமான கதைகளும் கவிதைகளும் படைத்து வருவதை எல்லாரும் அறிவார்கள். நண்பர் பாரதி தங்கராசனும் கண்ணனிலும் உமாவிலும் சிறந்த கதைகள் சில எழுதி நிறைந்த புகழ் பெற்றிருக்கிறார். இது தவிர, படமாகப் பிடிக்கத் தகுந்த பல மேடை நாடகங்கள் எழுதி நடிக்கும்படியும் செய்திருக்கிறார். எழுத்தாளர்கள் தரம் உயர வேண்டுமானால், அவர்களுடைய உள்ளம் பூரண வளர்ச்சியுற வேண்டுமானால் உண்மையான அடக்கமும் தளராத ஊக்கமும் வேண்டும் என்பதை இவர் அறிந்திருப்பதாகவே நான் எண்ணுகிறேன். இந்த இளைஞர் இலக்கிய வானிலே ஒளியோடு திகழ்வார் என்று நிச்சயமாகக் கூறலாம்.

# டாக்டர் ஸாகிர் உசேன்



இந்தியாவின் பிரசித்தி பெற்ற சர்வகலாசாலைகளிலே முக்கியமான ஒன்று அலிகார் சர்வகலாசாலை. அங்கே உப அத்தியட்சகராகப் பல காலம் இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர் டாக்டர் ஸாகிர் உசேன், பிஎச். டி. சென்ற நூற்ருண்டின் இறுதியில் பிறந்த இவர் அதே அலிகார் சர்வகலாசாலையிலும் பெர்லின் (ஜெர்மனியின் தலைநகர்) சர்வகலாசாலையிலும் கல்வி பயின்று, புலமை பெற்றவர்.

இந்தியாவின் சுதந்தரப் போராட்டம் இவருடைய சிந்தையைக் கிளறியது; கவர்ந்தது. சுதந்தரப்போராட்ட காலத்தில் எழுந்த சமூக, கலாசார மறுமலர்ச்சி இயக்கங்களின் முன்னணியில் இவர் விளங்கினுர். ஆங்கிலேயர் ஆண்டபோது நமது நாட்டுக் கல்வி முறை வெறும் குமாஸ்தாக்களாகத் தயாரிக்கவே உதவியது. அதை மகாத்மா காந்தியடிகள் அடியோடு மாற்ற எண்ணி, வார்தா கல்விப் பயிற்சி முறை ஒன்றைப் புதிதாக வகுத்தார். அந்தப் புதிய கல்விப் பயிற்சி முறைக்குக் கணிசமான உருக் கொடுக்க உதவியவர் இவர்தான்.

மேல் நாட்டுத் தத்துவங்களையும் கீழை நாட்டுத் தத்துவங்களையும் நன்கு பயின்ற டாக்டர் உசேன் இன்றும் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தின் தலைவராக இருப்பதுடன் புதிய கல்வி முறையைக் கொண்ட ஜமியமில்லியா இஸ்லாமின் உயிர் நாடியாகவும் திகழ்ந்து வருகிருர்.

இந்தியா சுதந்தரம் பெற்றவுடன் அதன் அரசியல் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்று ஒரு சபை நியமிக்கப்பட்டது. அதையே அரசியல் நிர்ணயசபை என்று நாம் வழங்குகிறோம். நமது அரசியலை உருவாக்கித் தந்த அந்தச் சபையிலும் இவர் அங்கம் வகித்துத் தொண்டு புரிந்திருக்கிருர்.

சிறந்த கல்விமானுகவும் தேச பக்தராகவும் விளங்கும் டாக்டர் ஸாகிர் உசேன் இன்று பீஹார் ராஜ்யத்தின் கவர்னராக இருக்கிருர்.




# அண்ணன் கடிதங்கள்

சம்பந்தம்

அன்புள்ள தம்பிக்கு,

நலம் பலவும் பெருகுக.

உனது அன்புக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். நீ தவறாது கடவுளைத் தொழுது வருவதைக் கேட்க நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இருந்தும் சென்ற கடிதத்தில் நான் வலியுறுத்திச் சொன்னதும் உனக்கு உதவியாயிருக்கும் என்றே நம்புகிறேன்.

நிற்க, உறையினுள் மடித்து வைத்திருந்த உன் கடிதத்தில் ஆங்காங்கு அழுக்குப் படிந்திருந்ததைக் கண்டேன். அந்தச் சமயத்தில் உன் கை சுத்தமாய் இல்லையென்று எனக்கு நன்றாய் விளங்கியது. ஏன் அப்படி? 'கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு' என்றெல்லாம் நீ கீழ் வகுப்பில் படித்திருப்பாயே! மறந்துவிட்டாயோ?

நீ விளையாடும்பொழுது உன் கை கால்கள் அழுக்காகத்தான் போகும். ஆனால் விளையாடி முடித்தவுடனே கழுவிச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். குளிக்கும்பொழுதும் ஏதோ அபிஷேகம் செய்துகொள்வது போல் தலையில் தண்ணீரைக் கொட்டிக்கொண்டு வந்து விடக்கூடாது. உடம்பிலிருக்கும் அழுக்குப் போகும்படி சுத்தமாகத் தேய்த்துக் குளிக்க வேண்டும். முக்கியமாகப் புறங்கை, விரல்களின் இடுக்கு, கழுத்து, காதுகளின் பின்புறம், தொப்பூழ், அக்குள், புறங்கால், முதுகு முதலிய பாகங்களை நன்றாகத் தேய்த்துக் குளிக்க மறக்கவே மறக்காதே!

வெகு நேரம் கழித்துப் பல் தேய்க்கச் சென்று, அவசர அவசரமாகப் பல்லைத் தேய்த்து விட்டு வந்துவிடுவார்கள் சிலர். ஆனால் பற்களை நிதானமாகத் தேய்ப்பதே நல்லது. அப்பொழுதுதான் பற்களும் பளிச்சென்றிருக்கும். எரிமுட்டைச் சாம்பலைப் போட்டுப் பல் தேய்க்காதே! பற்பொடியினாலோ அல்லது ஆலம் விழுது, வேலங் குச்சியினாலோ தேய்ப்பதுதான் சிறந்தது. வாயைச் சுத்தம் செய்யும்பொழுது, நாக்கையும் நன்றாய் வழித்து விட்டுக்கொள். வாய் நிறையத் தண்ணீர் எடுத்து நன்றாய் மேலும் கீழும் பக்கவாட்டிலுமாகக் கொப்பளித்துத் துப்பு.

விரல் நகங்களை அதிகமாக வளர விட்டுக்கொள்ளாதே! அதனால் நிறைய அழுக்குகள் சேரத் தொடங்கி உன் ஆரோக்கிய வாழ்வுக்குக் கேடு உண்டாகும். நகங்களைப் பல்



**நிற்பவர்:** என்ன தம்பி எழுது றீங்க?

**உட்கார்ந்திருப்பவர்:** நாவல் தான் எழுதிக்கிட்டு இருக் கேங்க.

**நிற்பவர்:** அடடே! காசை வீசி எறிந்தால் நாவல் வருகுது. இதுக்குப் போய் ஏன் நாக்கைப் பிடுங்கிக்கிறீங்க!

—குஞ்சு.

---

வில் வைத்துக் கடித்துக்கொண் டிருப்பதும் கூடாது. அவ்வப் பொழுது கத்தரிக்கோலினல் நகங்களை வெட்டி எடுத்துவிடு. இதெல்லாம் அற்ப விஷயங்கள் தான்; ஆனல் மிக மிக முக்கிய மானவை.

நன்ருக உடலைத் தேய்த்து ஸ்நானம் செய்துவிட்டுச் சிலர் அழுக்குத் துணியை எடுத்து உடுத்துக்கொண்டு விடுவார் கள். அதைவிட அசுத்தம் ஒன்றுமில்லை.

பள்ளிக்குச் செல்லும் பொழுது உடுத்துக்கொள்ள வும் வீட்டிலிருக்கும் பொழுது உடுத்துக்கொள்ளவும் தனித் தனியாக உடை வைத்துக் கொள். அதுதான் நல்லது. கண்ட இடங்களில், கவனிக்கா மல் அப்படி அப்படியே உட் கார்ந்துகொண்டு, உடையை அதி சீக்கிரத்தில் அழுக்காக்கிக் கொள்ளாதே! அடிக்கடி வியர்த்துக் கொட்டினல் அப் படியே உன் சட்டையைத் தூக்கி முகத்தைத் துடைத்துக் கொள்வது கூடாது. அதற் கெனத் தனியாக வேறு ஒரு சிறு துணி வைத்துக்கொள்.

அப்படி அழுக்காகும் உன் ஆடைகளைத் தினந்தவருது நன்ருய்த் தண்ணீரில் நனைத்து வைத்து எடுக்க வேண்டும். அதற்காகத் 'தப்பு திப்பு' என்று துணியைக் கல்லில் அடித்துக் கிழிக்க வேண்டாம். முதலில் நன்ருய் நனைத்து, சோப்பையும் தேய்த்து அப்படியே ஊற வைத்துவிடு. சற்று நேரம் சென்று, அவ்வுடையை வழக் கப்படி கும்மி எடு. அழுக்கு அனைத்தும் கரைந்து ஓடும். உடனே தண்ணீரில் நன்ருய் அலசியெடுத்துப் பிழிந்து உலர வை. நன்ருய் உலர்ந்ததும் அப் படியே உன் ஆடைகளை வாரிப் போட்டுக்கொண்டுவிடாதே!

அவற்றை எடுத்து ஒழுங் காய் மடித்து உள் கொடி யில் போட்டு வைத்துக் கொள்வதே நல்லது. அப் பொழுதுதான் உனக்கும் ஒவ் வொரு தடவையும் சலவையி லிருந்து எடுத்து உடுத்துக் கொள்வதுபோலவே தோன் றும். உனது ஆடை மடிப்பாய் எவ்வளவு நேர்த்தியாய் இருக் கும் தெரியுமா?

இதுமாதிரி உன் வேலையை நீயே செய்துகொள்வதில் மிகவும் உற்சாகமாக இறங்க வேண்டும். இந்த இளவயதி லிருந்தே சுத்தமாயிருக்க நீ பழகிக்கொள்வதே சிறந்தது. 'சுத்தம் சோறு போடும்; சுத்தமாயிருப்பதே தெய்வத் தன்மைக்கும் அடிகோலும்' என்ற மூதுரைகள் உன் நினைவில் எப்போதும் இருக்கவேண்டும்.




'ஜஞ'

## 25. சிறையில் நெடுமாறன்

இளநாகனும் நெடுமாறனும் என்ன பேசுகிறார்கள் என்று காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டான் சிங்கராயன். ஆனால் என்ன முயன்றும் அவனுக்கு ஒரு வார்த்தை கூடக் காதில் விழவில்லை. அவர்கள் பேசிக்கொண்டதாகவே தெரியவில்லை.

''சரி, வா போகலாம் வெளியே!'' என்று சிறிது நேரத்துக் கெல்லாம் இளநாகன் கூறுவது மட்டுமே அவனுக்குக் கேட்டது. அதைத் தொடர்ந்து காலடியோசையும் இடைநிலைக் கதவை நெருங்கி வந்தது.

சிங்கராயன் சிறிதும் மன இளக்கமின்றிப் பட்டாக் கத்தியைச் சித்தமாக வைத்திருந்தான். இளநாகன் தலை தெரிய வேண்டியதுதான்; ஒரே சீவு! அந்த இருளில் பட்டாக் கத்தியின் அலகு தகதகவென மின்னிக்கொண் டிருந்தது.

இதோ, இன்னும் ஒரே தப்படிதான் பாக்கி! சிங்கராயன் கை உயர்ந்தோங்கி விட்டது!

ஆனால், ''பிடியுங்கள் இவனை!'' என்று பயங்கரமான குரல் ஒன்று அந்தப்புரத்தினுள்ளே கேட்டது. சிங்கராயனே அதிர்ச்சியுற்றுப் பின்வாங்கி நின்றான். இளநாகனும் அந்த இடிகுரலைக் கேட்டு அலமந்துபோய்த் திரும்பினான். அங்கே அந்தப்புரத்து முன் வாயிலருகே கண்களில் தீப்பொறி பறக்க நின்றுகொண் டிருந்தார் சின்னக்காளி வேங்கையார். அவருடைய கை நெடுமாறனைச் சுட்டிக் காட்டிய நிலையில் இருந்தது. இரண்டு முரட்டு வீரர்கள் அவன்மீது பாய்ந்து, இரு கைகளையும் சேர்த்து நெருக்குவதுபோல இறுகப் பற்றிக்கொண்டார்கள். இப்படியெல்லாம் நேரும் என்று சற்றும் எதிர்பாராத நெடுமாறன் அவர்களுடைய பிடியிலே அகப்பட்டு நின்றான்.

அவன் திமிறக்கூட முயலாதது இளநாகனுக்கு வியப்பைத் தந்தது. இளநாகனும் அவனை மீட்பதற்கான குறிப்பு எதையும்



காட்டவில்லை. 'இருவரும், இதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது' என்று எண்ணினார்களோ என்று கருதும்படி இருந்தது.

''இவனைக் கொண்டுபோய், பாதாளக் கொட்டடியில்



அடைத்து வையுங்கள்!'' என்று வேங்கையார், இளநாகன் இருப்பதைப் பொருட்படுத்தாதவரைப் போல் மீண்டும் கர்ஜித்தார்.

இந்தச் சமயம் பார்த்து உருவிய வாளும் ஓங்கிய கையுமாகப் பின்புற வழியாக வந்து நின்றான் சிங்கராயன். அவனும் அவரோடு சேர்ந்து கொண்டு, ''இரும்புச் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்லுங்கள் இவனை! உம்..'' என்று மிடுக்கோடு கத்தினான். ஏதோ ஒரு பெரிய காரியத்தை அவன் ஒருவனாகவே தனியாக நின்று சாதித்துவிட்டதைப்போல அவன் முக பாவம் இருந்தது.

நெடுமாறன் கைகள் இரண்டும் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டன. ஒருவன் அவன் கண்களைத் துணியால் மறைத்துக் கட்டினான். அதற்குப் பிறகு அவனுக்கு அங்கே என்ன நடந்தது என்பது தெரியாது. கண்களின் கட்டை அவிழ்த்துவிட்டபோது துர்க்கந்தமும் நெடியும் வீசும் பாதாளச் சிறை ஒன்றில் இருப்பதைக் கண்டான் அவன். அப்பொழுது கூட அவன் முகத்தைப் பார்த்தால் அவன் எவ்வளவு சிறந்த

வீரன் என்பது வேங்கையாருக்கு விளங்கியிருக்கும். முகத்தில் லவலேசமாவது கவலையின் குறி இருக்க வேண்டுமே! சுத்த வீரர்கள் உயிர் போவதாக இருந்தாலும் மனத் தளர்ச்சியுறுவ தில்லை என்பதை அவனைப் பார்த்தே அறிந்துகொண்டு விட லாம்.

அவனுடைய கைகளைப் பிணைத்திருந்த இரும்புச் சங்கிலி இரண்டும் கருங்கல் சுவரில் பதித்திருந்த ஒரு வளையத்தில் மாட்டப்பட் டிருந்தன. கைகள் இரண்டும் விலங்கிடப்பட்டுப் பின்புறமாகப் பூட்டப்பட்டிருந்தன. அதன் சாவியை அந்த முரடன் வைத்துக்கொண் டிருந்தான். இந்த நிலையில் அந்த இடத்தைவிட்டுத் தப்பிச் செல்வதற்கு அவனுக்கு ஒரு வழியும் தோன்றவில்லை. பொழுது விடிவதற்குள் ஏதாவது முயன்றால் தான் உண்டு. அப்புறம் எந்த முயற்சியும் பலிக்காது. வேங்கை யார் இந்தத் தடவை ஏமாந்து இருந்துவிட மாட்டார். எனவே அவன் உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும் என்பதை உணர்ந்தான். என்ன செய்வது? பலம் கொண்ட மட்டும் உரத்த குரலில், '' தண்ணீர்! தண்ணீர்!'' என்று கூவினான். அந்தச் சிறை யின் எதிரொலி அவன் காதுகளையே துளைத்தது. ஆனால் அதனால் ஒரு பயனும் உண்டாகவில்லை.

இந்தத் தடவை பலம் கொண்ட மட்டும் இழுத்து அந்த இரும்புச் சங்கிலியை அறுக்கவேண்டும் என்று அவன் எண்ணி னான். அப்படி அறுத்துவிட்டால் மட்டும் அந்த இடத்தி லிருந்து தப்பிச் செல்லமுடியுமா என்று அவன் யோசிக்க வில்லை. அது பிறகு யோசிக்க வேண்டிய விஷயம். இப்பொழுது அறுப்பதுதான் முதல்வேலை. இத்தனைக்கும் அவனுக்கு நல்ல பசி; காலையிலிருந்து ஓய்வு ஒழிவின்றிப் பிரயாணம் செய்து களைத்திருக்கிறான். ஆயினும் மனோதைரியத்துடன் அவன் இரு கைகளையும் பின்னால் நீட்டிக்கொண்டு உடலை முன்னால் சாய்த்துக்கொண்டு மூச்சை இழுத்துப் பிடித்தான். நெற்றி நரம்புகளும் இரத்த நாளங்களும் புடைத்து வெடித்துவிடும்போ லிருந்தன. ஓர் இம்மியளவுகூட அவனுக்கு வெற்றி கிடைக்க வில்லை. உடலெல்லாம் வேர்வையால் வெள்ளமாக நனைந்தது. நெஞ்சு தாகத்தால் வறண்டது. அவன் சிறிது நின்று ஓய்வு எடுத்துக் கொண்டான்.

அடுத்த முறை இன்னும் பன்மடங்கு வேகத்துடன் அந்த முயற்சியில் அவன் ஈடுபட்டான். அவன் உடல் பலத்தைவிட உள்ளத்தின் வேகம் இப்பொழுது அதிகமாக இருந்தது. இந்தத் தடவையும் தோல்விதானோ என்று எண்ணும்போதே 'மளுக்' கென்று எங்கேயோ ஓர் ஓசை கேட்டது, அவ்வளவுதான்; அவனுக்குத் தன்னம்பிக்கையும் உற்சாகமும் தோன்றிவிட்டன. மூன்றாவது முறையாக மூச்சை இழுத்துப் பிடித்தான்! தசை கள் எல்லாம் கண்டு கண்டாக விம்மிப் புடைத்து நின்றன.

என்ன ஆச்சரியம்! முதல் இழுப்பிலேயே வளையம் பதித் திருந்த கருங்கல் சதுரமாகப் பெயர்ந்து வந்துவிட்டது. கொஞ் சம் தப்பியிருந்தால் அது அவன் காலிலேயே விழுந்திருக்கும். ஆனால், நல்ல வேளை அவன் பிழைத்தான்! எதிர்பாராத

இன்னல்களுக்கு நடுவே எதிர்பாராத நன்மையும் உண்டாகக் கூடும் என்பதை அவன் இப்போது உணர்ந்தான். இன்னல் வந்துவிட்டதே என்று இடிந்துபோய் உட்கார்ந்திருந்தால் இப்படிப்பட்ட ஒரு நன்மை தானுக உண்டாகிவிடுமா? சுவரி லிருந்து கல் பெயர்ந்து விழுந்த இடம் அவன் கைக்கு எட்டும் உயரத்தில்தான் இருந்தது. அந்த வழியாக ஓர் ஆள் நுழைந்து செல்லலாம் என்பதையும் கண்டான் அவன். அந்த இடை வெளிக்கு அப்பால் என்ன இருக்கிறது என்று கண்டறிய எண்ணிய போது அந்த நிலவறைச் சிறையின் இரும் புக் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது. நெடுமாறன் சட் டென எட்டிப் பார்த்தான். அந்த முரடன் ஒரு கையில் தண்ணீர்ச் சட்டியுடன் கதவைத் திறக்க முயன்றுகொண் டிருந்தான். சாவிகளின் கலகலவென்ற ஓசையிலிருந்து சரியான சாவியை அறியாமல் அந்த முரடன் திண்டாடுவது தெரிந்தது.

எங்கிருந்துதான் அவனுக்குப் பலம் வந்ததோ தெரிய வில்லை. ஒரே தூக்காகத் தூக்கி அந்தக் கல்லை இருந்த இடத்தி லேயே பொருத்தியிருப்பதுபோல் வைத்துவிட்டான். கைப் பூட்டு மட்டும் அப்படியேதான் இருந்தது. அந்த முரடன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தபோது நெடுமாறன் ஒன்றுமே தெரியாதவனைப்போலச் சோர்ந்து கிடந்தான்.

''இந்தா தண்ணீர்! கோட்டையே கொள்ளை போவது போல் கத்துகிறுயே! குடி! மாட்டுத் தொட்டியிலிருந்து நல்ல புளித்தகாடியாகக் கொண்டு வந்திருக்கிறேன்!'' என்று கையி லிருந்த சட்டியை நீட்டினுன் அந்த முரடன்.

''அந்த மூலையில் கொண்டுபோய் வை!'' என்று பேசவே சக்தியற்றவன்போல் முனகினுன் நெடுமாறன்.

''இந்த மாதிரியான காடியை உன் ஜன்மத்தில் நீ எங்கே குடித்திருக்கப் போகிருய்?'' என்று சொல்லிக்கொண்டே திரும்பிய முரடனுக்கு அடுத்த வார்த்தையைப் பேசும் அரிய சந் தர்ப்பம் நேரவில்லை. அந்தப் புளித்த காடி இருந்த சட்டி அவன் முகத்திலே போய் மோதி உடைந்து விழுந்தது. நெடு மாறன் தன் கையிரண்டையும் பிணைத்திருந்த சங்கிலியால் அந்த முரடன் முகத்தைச் சேர்த்து வளைத்து இழுத்தான். அந்தச் சங்கிலி அந்த முரடனுக்குக் கடிவாளம் போட்டதுபோல் அவன் வாயின் தாள்களைக் கிழிக்கத் தொடங்கியது.

''ஐயோ, ஐயையோ! என்னை விட்டுவிடு!'' என்று கெஞ் சினுன் அந்த முரடன்.

''இதோ என் காரியம் எல்லாம் முடியட்டும்! உன்னை உடனே விட்டுவிடுகிறேன்!'' என்று சொல்லிவிட்டு நெடு மாறன் அவன் கையிலிருந்த சாவியைப் பிடுங்கினுன். தன் கைகளை விடுவித்துக்கொண்டு அதே சங்கிலியால் அந்த முரடன் கைகளைப் பிணைத்து இரும்புக் கதவிலே இணைத்துப் பூட்டினுன்.

''சத்தம் போட்டாயோ உன் மண்டையைப் பிளந்து விடுவேன்!'' என்று மிரட்டியவாறே நெடுமாறன் சுவரிலிருந்த

கல்லை மீண்டும் இழுத்துக் கீழே தள்ளினான். அந்தக் கல்லின் மீதே ஏறி, அந்தத் துவாரத்தின் வழியாக அடுத்த பக்கத்தை எட்டிப் பார்த்தான்.

என்ன விந்தை! அங்கே யாரோ இருவர் மிகவும் பல ஹீனமான குரலில் பேசுவதுபோல் கேட்டது. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று நெடுமாறன் நன்றாக உற்றுக்கேட்டான். இப்போது இரண்டு பேர் பேசுவதாக அவனுக்குப் படவில்லை. ஒருவன் மட்டும், ''தாத்தா! தாத்தா!'' என்று திரும்பத் திரும்ப அழைப்பதுபோல் கேட்டது. அந்தப் பேரொலியில் குரல் சரியாக விளங்கவில்லை. கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல் கேட்டது. அதற்கு மறுமொழி எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் அந்தக் குரலின் அழைப்பு வர வர வலுத்துக்கொண் டிருந்தது. அப்படி வலுத்து வந்த அழைப் பொலி அழுகுரலாக மாறியது. விம்மலோடு கேவியது. ''தாத்தா!'' என்று பெருங்குரல் எடுத்து 'ஓ' வெனக் கூவி யழுதது.

இதையெல்லாம் கேட்ட நெடுமாறன் நெஞ்சம் துணுக்குற்றது. அதற்கு ஏதோ துக்ககரமான சம்பவம் நடந்துவிட்டது என்று தோன்றியது ஒரு காரணம். மற்றொரு காரணம் அப்படி அழைத்தது செங்கணனாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்ததாகும். இந்த இருளடைந்த அறையில், நெடியும் துர்வாடையும் நிறைந்த இடத்தில் செங்கணனையும் இளமாறனை வளர்த்த கிழவனையும் தவிர, வேறு யார் அடைபட்டிருக்கப் போகிறார்கள்?

இந்த எண்ணம் தோன்றியதும் அவன் தன் இடையை ஒரு முறை தொட்டுப் பார்த்துக் கொண்டான். அந்தக் கிழவன் கொடுத்திருந்த ரகசிய ஓலையை அவன் எப்போதும் இடுப் பிலேதான் சேர்த்துக் கட்டியிருந்தான். பிறகு வந்தது வரட் டும் என்கிற துணிச்சலோடு, ''செங்கணா! செங்கணா!'' என்று இருமுறை உட்புறமாகப் பார்த்துக் கூவியழைத்தான்.

அதற்கு விடை ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் அழுகைக் குரல் நின்றுவிட்டது.

''செங்கணா!''

இப்போது, ''யார்?'' என்று மட்டும் மறுமொழி வந்தது.

''செங்கணன்தானே!''

''ஆமாம்.''

''நான்தான் நெடுமாறன்!''

''அண்ணா!'' என்று அலறினான் செங்கணன்.

''செங்கணா!'' என்று துடித்தான் நெடுமாறன்!''

அடுத்த கணமே செங்கணன் வாயை யாரோ அடைத்து விட்டதுபோல் ஒரு மௌனம் நிலவியது. நெடுமாறன் தயங்கி னான்; தவித்தான். (தொடரும்)

# அரிவாட்டாய நாயனர்

'கிங்கரன்'



நிலா வெளிச்சத்தில் பாட்டி பேரன், பேத்திமார்கள் புடைசூழ அமர்ந்திருந்தாள். ஊசி விழுந்தால் ஓசை கேட்கும். அத்தனை அமைதியுடன் குழந்தைகள் பாட்டியின் வாயைப் பார்த்துக்கொண் டிருந்தார்கள். பாட்டியின் கதையென்ருல் அவர்களுக்கு அத்தனை ஆர்வம்! பாட்டியின் வாய் அசையத் தொடங்கியது. அவர்களும் காதைத் தீட்டிக் கொண்டார்கள்.



**பொ**ன்னி ஆறு பாயும் சோழவள நாட்டில் கணமங்கலம் என்னும் ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் தாயனர் என்னும் வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் சிறந்த பக்திமான். சிவபெருமானிடத்தில் அளவற்ற பற்றுக் கொண்டவர். நாள்

தோறும் பெருமானுக்கு அரிசியும் செங்கீரையும் மாவடுவும் படைத்துவந்தார். இப்படியிருக்கும்போது அவருக்கு ஒரு சோதனைக் காலம் வந்தது. மிகவும் பக்தியுடன் தம்மை அணுகியவர்களைச் சோதனைக்கு ஆளாக்குகிருர் பெருமான். அப்படிச் சோதனைக்கு ஆளாக்குவதாகத்தான் அவர் செயல் தோன்றும். ஆனல் அதன் மூலம் பக்தர்களின் பெருமையை உலகுக்கு உணர்த்துகிருர் அவர். தம் அருளால் அவர்களுக்கு நற்கதியையும் அளிக்கிருர். எம்பெருமானின் லீலைகள் இவை!

தாயனுரின் செல்வமெல்லாம் நாளுக்கு நாள் குறையத் தொடங்கியது. வறுமை வாட்டியது. செல்வம் குறைந்தாலும் அவருடைய பக்தி குறையவில்லை. அதிகரித்தது என்றே சொல்ல வேண்டும். வியாபாரத்தை விட்டு விட்டுக் கூலி வேலை செய்யத் தொடங்கினுர். அதில் தமக்குக் கூலியாகக் கிடைக்கும் செந்நெல் முழுவதையும் கடவுளுக்கே அமுதாக்கிப் படைத்துவந்தார். அதனை அடியார்களுக்கு இட்டுத் தாம் பட்டினிகூடக் கிடப்பார். அவருடைய மனையாளும் கஷ்டம் வந்தபொழுதும் அவர் மனம் கோணுது உபசரித்து வந்தாள்.

ஒரு நாள் தாயனுர் மனைவியுடன் செந்நெல், கீரை, மாவடு இவற்றைத் தாங்கி இறைவனுக்கு நிவேதனம் செய்யச் சென்றுகொண்டிருந்தார். அந்தோ, பாவம்! சோதனையிலும் சோதனை! தள்ளாடியவாறு சென்ற தாயனுர், களைப்பு மிகுதியால் தரையில் விழுந்துவிட்டார். அடுத்த கணம், தலையிலிருந்த கலயங்கள் உருண்டோடின. பண்டங்கள் யாவும் மண்ணிலே கலந்து பயனற்றுப் போயின. அதனைக் கண்ட தாயனுர் மிக்க வருத்தத்துடன் கலயங்களை உருண்டோட விட்ட தம் தலையைக் கதிர் அறுக்கும் அரிவாளால் கொய்துகொள்ளத் தொடங்கினுர். உடனே சிவபெருமான், ‘விடேல்’ என எதிரே தோன்றி, பக்தரின் செயலைத் தடுத்து, காயம்பட்ட வடுவினையும் மறையச் செய்தார். எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாக மெய்ம்மறந்து நின்ருர் தாயனுர்.

அன்று முதல் அவருக்கு அரிவாட்டாய நாயனுர் என்ற பெயர் வழங்கலாயிற்று. தம் கழுத்தை அரிவாளால் கொய்யத் தொடங்கியதால் இந்தத் திருநாமத்தைப் பெற்ருர் அவர்.

**க**தையைக் கேட்டுப் பேரன் பேத்திமார்கள் சந்தோஷத்துடன், “பாட்டி, நாளைக்கும் இதுபோல் ஒரு கதை!” என்று ஆரவாரத்துடன் படுக்கச் சென்றனர்.

# சபலம்

'வாதூலன்'



'போகலாமா, போக வேண்டாமா?'

கல்லூரியின் ஒரு மூலையிலுள்ள வாசகசாலைக்குள் மௌனமாக அமர்ந்தபடி என்னையே நான் கேட்டுக்கொண்டிருந்தேன். ஆயிற்று; இன்னும் அரைமணி; நண்பர்கள் வந்துவிடுவார்கள். என்ன பதில் கூறுவது? 'வரவில்லை' என்பதா? இல்லை, விடையொன்றும் இறுக்காமல் உடன் சென்றுவிடுவதா?

இருதலைக்கொள்ளி எறும்பு போலத் தவித்தேன். 'போகலாம்' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு போய்விட்டாலோ, ஏதோ ஒரு குற்றம் செய்வது போன்ற உணர்ச்சி; 'போகவில்லை' என்று மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாலோ, வலுவில் கிடைப்பதற்கிருந்த ஆனந்தம் பறி போய்விட்டது போன்ற நிலை. இன்னது செய்வது என்றே தெரியாமல் மனம் குழம்பினேன்.

போனால்தான் என்ன? என்ன கஷ்டம் வந்துவிடும்? 'ஜம்'மென்று இரண்டரை ரூபாய் ஸீட்டில் உட்கார்ந்து ஆனந்தமாக மூன்று மணி நேரம் சினிமா பார்க்கும் சந்தர்ப்பம் மீண்டும் கிட்டுமா என்ன? நரசிம்மனுக்குப் பல முறைகள் ஓசிப் 'பாஸ்' கிடைத்திருக்கிறது. ஏதோ என் அதிருஷ்டம் இந்தத் தடவை என்னைக் கூப்பிட்டிருக்கிறான்; இல்லை, என் துரதிருஷ்டம் இன்று கூப்பிட்டிருக்கிறான். நாளைக் கல்லூரியின் விடுமுறை நாளான சனிக்கிழமை பாஸ் கிடைத்து என்னை அழைத்திருப்பானே, எனக்கு அதிருஷ்டமிருந்தால்? நரசிம்மனும் சாதாரணமாக என்னை இதற்கெல்லாம் கூப்பிடும் சுபாவமுள்ளவனல்ல. சமயத்தில் நாராயணன், அவசர காரியமாக நுங்கம்பாக்கம்வரை செல்ல வேண்டி நேர்ந்துவிட்டது. எனவேதான், ''ஓர் ஆள் மிச்சமிருக்கு. வர்றியா?'' என்று வினவினான் அவன். பக்கத்தில் ராமநாதனும் நின்றிருந்தான். ''ஓட்டலுக்குப் போய்விட்டு வாருங்களேன். யோசித்துச் சொல்கிறேன்'' என்று பதில் கூறினேன் நான். இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் வந்துவிடுவார்கள். வருவதற்கு

மறுத்தால், வழக்கப்படி என்னைக் கேலி செய்துவிட்டுப் போவார்கள். ஆனாலும் என்றுமில்லாமல் இன்று என் உள்ளம் பேதலிக்க ஆரம்பித்திருக்கிறதே!

நேற்று இதுபோல் என்னை அழைத்திருந்தாலும் ஒரு வேளை சரியென்று சென்றிருப்பேன். நேற்று மத்தியான்னம் இங்கிலீஷ் காம்போஸிஷன்தான். ஆசிரியரிடம் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிச் சினிமா பார்க்கச் சென்றிருப்பேன்.

என் உதடுகளில் குறுநகை படர்ந்தது, இவ்வெண்ணம் எழுந்ததுமே. நேற்று இம்மர்திரி கூப்பிட்டிருந்தால் மட்டும், உடனேயே போயிருப்பேனா? மனச்சாட்சிக்குத்தான் தெரியும் உண்மை. போயிருக்க மாட்டேன். இன்று போலத்தான் நேற்றைக்கும் குழம்பியிருப்பேன், நிச்சயம். ஆனால் நேற்று உண்மையில் நரசிம்மன் என்னைக் கூப்பிடவில்லையாதலால், 'நேற்றைக்குக் கூப்பிட்டிருக்கக் கூடாதோ? வந்திருப்பேனே!' என்று மேலுக்குக் கூறலாம்; அவ்வளவுதான்.

மணி என்ன? நிமிர்ந்து பார்த்தேன். ஒன்றரை. எங்கெங்கலாமோ சுற்றிச் சுழலுகிறதே யொழிய முடிவான இடத்திற்கு வரக்காணோமே சிந்தனை! நேற்று இல்லாத கஷ்டம் இன்றிருக்கிறது. பிற்பகல் கெமிஸ்டிரி வகுப்பு இருக்கிறது. அதன் ஆசிரியர் சந்தானத்திடம் அப்பாவுக்குப் பழக்கமுண்டு. பிற்பகல் வகுப்பில் என்னைக் காணாமல், பின்னால் எப்போதாவது அப்பாவைக் காணும்பொழுது ஏதாவது எக்கச்சக்கமாகக் கேட்டு வைத்தால்? காலையிலேயே நாராயணன் வரமாட்டானென்று நரசிம்மனுக்குத் தெரியும்போலும். ஏனென்றால் அப்போதே நச்சு என்னைக் குறிப்பாகக் கேட்டான். இந்தச் சங்கடத்தைச் சொன்னேன். சிரித்தான் நரசிம்மன். ''ஆமாண்டா, எவ்வளவோ பேர் வகுப்பிலே! உன்னை மட்டும் வரவில்லைன்னு பார்த்து, அதே நினைவா உங்கள் அப்பாவிடம் சொல்லப் போகிறாராக்கும்! போடா போ!'' என்றான் அவன். அப்பொழுதே, ''வர வேண்டாம்; இப்படிப் பயப்படுகிறாயே!'' என்று சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா? இந்தத் திரிசங்கு நிலைமை வந்திருக்காதே! ஆனால் அவனோ இலேசாக என்னுள் ஆசையை எழுப்பி விட்டானே!

மூன்று மாதத்திற்கு முன் நடந்த நிகழ்ச்சி சட்டென என்னுடைய நினைவுக்கு வந்தது. பக்கத்துவீட்டில் குடியிருக்கும் ரமேஷை ஒரு நாள் தற்செயலாக என் கல்லூரியருகில் பார்த்தேன். அவன் லயோலா கல்லூரியில் படிப்பவன். அவனைக் கண்டதுமே, ''எங்கே இந்தப் பக்கம்? கிளாஸ் இல்லை?'' என்று வினவினேன் வியப்புடன்.

''இருக்கு; ஃபிசிக்ஸ் பிராக்டிகல். 'ரெபடிஷன்'தான். எவன் பண்ணுறான்!'' என்றான் அலட்சியமாக.

''அட்டெண்டன்ஸ் போயிடாதோ?'' என்று கேட்டதற்கு, ''ஏகப்பட்டது இருக்கு!'' என்ற பதில் வந்தது.

''இருந்தாக்கூட'' என்று நான் இழுத்தேன். முடிக்குமுன் இடைமறித்தான் ரமேஷ். நீ இந்த ஆர்ட்ஸ் காலேஜில் படிக்கவே லாயக்கற்றவன்! நான் மட்டும் இங்கே படிச்சிருந்தா . . உம், அதை நான் நினைச்சு என்ன பண்ணுவது!'' என்றான் பரிகாசமாக.

'லாயக்கற்றவன்' என்றானே ரமேஷ் கேலியாக! அதைப் பொய்ப்பிக்கவே இன்று நண்பர்களுடன் சென்றால் என்ன? 'அட்டெண்டன்ஸை'ப் பற்றிக் கவலையில்லை. நிறைய இருக்கிறது. ரசாயான ஆசிரியரும் நான் வராததை ஞாபகம் வைத்துச் சொல்லிவிடப் போவதற்கு அதிகச் சந்தர்ப்பமும் இல்லை. கடைசி வகுப்பான 'பிசிக்ஸ்' கிளாஸில் நோட்ஸ் விட்டுப் போய் விடுமே என்ற கவலையும் இன்று கிடையாதே! புதிதான பாடத்தைத் துவக்கி 'லெக்சர்'தான் பண்ணப் போகிறார் இன்று. எல்லாம் அநுகூலமா



கத்தான் இருக்கிறது. இருந்தாலும்..? கல்லூரியின் அறைக்குள் மத்தியான்னம் அடைந்து கிடக்க வேண்டிய நான் கவலையற்றுத் தியேட்டரில் சினிமா பார்ப்பதென்றால்..? வகுப்பில் உட்கார்ந்து பாடம் படிப்பான் என்று எண்ணிக்கொண்டிருக்கும் பெற்றோர்களின் எண்ணத்திற்கு மாறாக, இரண்டரை ரூபாய் ஸீட்டில் அமர்ந்து படக் காட்சிகளைப் பார்ப்பதென்றால்..?''

விவரிக்க இயலாத வேதனையுணர்ச்சி தோன்றிற்று என்னுள்ளே. ஆனால் அவ்வுணர்ச்சி மண்ணைக் கவ்வியது. 'தினமுமா இதுபோலச் செய்யப் போகிறோம்?' என்ற வினா எழும்பியதும், ஏதோ ஒரு நாள்தானே இதைப் போலச் சினிமா பார்க்கப் போகிறோம்! ஆனால் ஒரு நாள் பழக்கம் விட இயலாத கெட்ட பழக்கமாகப் பிடித்துவிட்டால்? இன்று எப்படிப் போகிறோமோ அதைப் போல மீண்டும் மீண்டும் போகத் தோன்றிவிட்டால்? இலவச டிக்கெட்டிலிருந்து, வீட்டுப் பணத்தையே எடுத்துக் கல்லூரிக்கு மட்டம் போட்டுப் படம் பார்க்குமளவுக்குக் கொடிய வழக்கமாக வளர்ந்துவிட்டால் என்ன செய்வது? அதன் பலனைப் படிப்பையே புறக்கணிக்க நேர்ந்தால்..?

'சே! என்ன அநாவசியமான கவலை இது; நரசிம்மனும் ராமநாதனும் எனக்குத் தெரிந்து இரண்டு மூன்று தடவைகள் இது போலச் சென்றிருக்கிறார்கள். அதுவே கெட்ட பழக்கமாக அவர்களைத் தொற்றிக்கொண்டு விட்டதா? படிப்பின்மீது கவனம் செலுத்தாமலிருக்கிறார்களா அவர்கள் அதனால்? இல்லையே! பன்முறை அவர்கள் சென்ற பாதையில் நான் ஒரு முறை சென்றால் என்ன? பணம் காசு செலவும் கிடையாது. 'ஓசி'தானே..?

'ஆனால்..? ஐயோ! மற்றொரு கஷ்டம் இருக்கிறதே! படம் முடிய, கிட்டத்தட்ட ஆறு மணி ஆகிவிடும். பிறகு பஸ் பிடித்து வீடு வந்து சேருவதென்றால் இரவாகிவிடுமே! ஏன் இவ்வளவு நேரம் என்று கேட்டால் என்ன சொல்

வது? போன ஆண்டு மாதிரி 'ப்ரி யுனிவர்சிடி' வகுப்பென்றால், 'ஃபிசிகல் டிரெயினிங்' கிளாஸ் எனக்கு உதவி புரியும். ஆனால் அது கூட ஐந்துக்கெல்லாம் முடிந்து விடும். ஆறு மணிக்குள் வீட்டை அடைந்துவிடலாம். ஆனால் சினிமா முதற்காட்சி விடும்போது கூட்டம் நெருக்குமே! நிச்சயம் வரும்போது ஏழு மணியாகிவிடும். காரணம் என்ன கூறுவது? என்ன பதில் சொல்வது? 'ஏதாவது ஒரு 'பிரெண்ட்' வீட்டுக்குப் போயி ருந்தேன்'னு சொல்லேண்டா. இது தானா பிரமாதம்!'' என்றான் நரசிம்மன். காலையில் இந்தப் பிரச்னையைக் கிளப்பியதும், பாவி! என்னென்ன தடங்கல் சொன்னா லும், அவற்றில் ஏதாவதொன்றை ஏற்றுக்கொண்டு என்னை விடாமல், அவற்றைச் சுலபமாகக் கடப்ப தற்கு வழி சொல்லித் தருகிறானே நச்சு! அந்த வழிகளால்தானே, நான் இப்போது இந்த நிலைமையி லிருக்கிறேன்!

நண்பன் வீட்டிற்குப் போயிருந் தேன் என்று பொய் சொல்லிப் படம் பார்க்கலாமா? 'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்திவை' என்ற பழமொழி இருக்கும்போது ஓர் உண்மையை மறைத்து ஏன் நான் சினிமா பார்க்கக் கூடாது? அதுவும் எனக் குப் பிடித்த படம்! முன்னாலேயே போவதற்கிருந்த சந்தர்ப்பம் எப் படியோ நழுவி விட்டது. இன்றோ, பாலுடன் தேனும் கலந்தாற்போல் இலவச டிக்கெட்டுடன் சினிமாவின் நூறாவது நாளும் ஒன்று சேரு கிறதே! நடிகர்களை நேரில் காணும் வாய்ப்பு மீண்டும் வருமா என்ன?

மனத்தின் மற்றொரு குரல், 'சே! பொய் சொல்லியாவது சினிமா பார்க்காவிட்டால்தான் என்ன?' என்று இடித்துரைத்தது. 'ஆ! பிரமாத பொய்! இதுக்கு மேலே எவ்வளவோ பொய்களையெல்லாம் எவரெவரோ சொல்லியிருக்கிறார் கள். இந்தச் சின்ன பொய்க்காகப் பயப்படுகிறாயே!' என்று இன்னொரு குரல் ஓசைப்பட்டதும், முன்னால் கிளம்பிய குரல் அடங்கிவிட்டது.

பொய் கூறினால் வீட்டிலே கண்டு பிடித்து விடுவார்களோ? சாதா ரணமாக என்றாவது ஒரு நாள் வீட்டிற்கு வர நேரமாகுமென்றால் முன்னாடியே சொல்லி விட்டுச் செல்லும் நான், இன்று முன் கூட்டியே ஏன் கூறவில்லை என்று சந்தேகப்படுவார்களோ? மேலும் எனக்குத் தக்க தருணத்தில் தைரிய மாகப் பொய் சொல்ல வாய் வராது. மனத்தின் விருப்பத்தை மீறி, நாக்கு இடக்குச் செய்து விடும். என்றைக்குமில்லாமல் இன்று மெய்யை மறைக்கும்போது, என்னையறியாமலேயே என்னிடம் தோன்றும் மாற்றங்களைக் கண்டு உண்மையைப் புரிந்துகொண்டு விட்டால் என்ன செய்வது?

சே! அம்மா அடிக்கடி கூறுவது போல் எனக்கு ஸ்திர புத்தியே கிடையாதுதான். வேறு யாராவது என் நிலையிலிருக்கும் பட்சத்தில், ஒன்றும் யோசனை செய்யாமலே கிளம்பியிருப்பர்; அல்லது தீர்மான மாக வரவில்லையென்று முதலி லேயே முடிவு கூறியிருப்பர். நான் தான் எந்தத் திசைக்கும் தீர்மான மாகத் திரும்ப இயலாமல் தவித் துக்கொண் டிருக்கிறேன்.

மணி என்ன ஆகிறது? அடடே! ஒன்றேமுக்காலைத் தாண்டி விட்டதே! ஏன் நச்சுவும் ராமுவும் இன்னும் வரவில்லை? ஒன்று நாற் பதுக்குள் வந்துவிடுவதாகக் கூறி விட்டுச் சென்றார்களே! ஒரு வேளை என் ஞாபகமேயின்றி அப்படியே போய் விட்டார்களோ? இல்லை, நாராயணன் நுங்கம்பாக்கம் சென்று வந்துவிட்டானோ? இரண் டில் எதுவாயிருந்தாலும் நல்லது தான்..

எப்படியும் இன்னும் ஐந்து நிமிஷத்தில் வந்துவிடுவார்கள். அதற்குள் ஒரு முடிவுக்கு வர வேண்டும். நெஞ்சே! சீக்கிரம் முடிவுக்கு வா! இந்தப் போராட் டத்திலிருந்து சீக்கிரம் என்னை விடுவி.

சினிமாவுக்குப் போய்ப் பார்த்து விட வேண்டும். என்னோடொத்த மாணவர்கள் எவ்வளவு பேர் இ போல் செல்கிறார்கள்! அவர்களை

போல் ஒரு நாள் நான் சென்ருல் என்ன? வீட்டில் பெற்ருேர்கள் படிப்புக்கென்று கொடுத்த பணத்தையா செலவழித்துப் படம் பார்க்கப் போகிறேன்? இல்லே. இலவசடிக்கெட்டு.வலுவில் என்னே அழைக்கிருர்கள் நண்பர்கள். இன்று மத்தியான்னம் முக்கியமான பாடமொன்றும் விட்டுப்போய் விடாது, வீட்டிற்கு லேட்டாக வந்தாலும் ஏதாவது கூறி மழுப்பி விடலாம். பொய் கூறி விட்டோமே என்ற உறுத்தல் இருந்தாலும் இன்று ஒரு நாள்தானே இருக்கப் போகிறது? பரவாயில்லே. அதற்காக, எவ்வளவோ நாட்களாகப் பார்க்க வேண்டுமென்று ஆசையுடன் காத்துக் கிடந்த சினிமாவுக்கு, 'ஹை கிளாஸ்' ஸீட்டான இரண்டரை ரூபாய் ஸீட்டிற்கு இலவச பாஸ் கிடைத்திருக்கும், அதுவும் படத்தின் நூருவது தினத்தன்று கிடைத்திருக்கும், சந்தர்ப்பத்தை முட்டாள்தனமாகக் கைநழுவ விட்டு விடுவதா? முடியாது! முடியவே முடியாது!

தீர்மானித்துவிட்டேன். நண்பர்கள்கூடச் செல்வதென்ற முடிவு என்னுள் உருவாகி விட்டது. மெல்ல எழுந்து வெளியே வந்தேன். அவர்கள் வரும் வழியில் என் விழிகளிரண்டும் ஆர்வத்துடன் பதிந்தன. அட! தூரத்தில் வருகிருர்களே நரசிம்மனும் ராமநாதனும்! அவர்களே நெருங்கினேன். ''நானும் வரேண்டா. ஏன் இவ்வளவு நேரம்? போகலாமா இப்போதே? ஏற்கெனவே மணி ரொம்ப ஆயிடுத்து! வா கிளம்பு. புத்தகத்தைக் கப்போர்டிலே வச்சுட்டு வரட்டுமா?'' என்றேன் படபடவென்று உற்சாகத்துடன்.

''போச்சு! வரேன்னு பெரியவர் திருவாய் மலர்ந்து அருளியாச்சோ இல்லேயோ! பாஸும் போச்சு!'' என்ருன் நரசிம்மன் கேலியாக. எனினும் அந்தக் கேலியில் வருத்தத்தின் சாயல் கலந்திருப்பதை உணராமலில்லே நான்.

''என்னடா என்ன ஆச்சு?''

''ஆகிறதென்ன! ஹோட்டல்லே சாப்பிட்டு ரூபாய் கொடுக்கிற போது 'பாஸு'ம் கீழே நழுவி விழுந்துடுத்து. கவனிக்கவேயில்லே. பாதி வழியிலே பார்த்தா, காணும்! திரும்பவும் ஓடிப் போய்த் தேடினேம். கிடைக்கிறதெங்கே! எவனுக்கு அதிருஷ்டமோ!—'' என்று நிறுத்தினன் நரசிம்மன்.

பேச நா எழவில்லே எனக்கு.

''ஒரு வேளே இவன் 'போகலாம்'னு 'டிசைட்' பண்ணற சமயத்திலே, 'பாஸு'ம் தொலேஞ்சுதோ என்னவோ! என்னடா நச்சு, என்ன நான் சொல்லறது? சரி, விட்டுத் தள்ளு, வா கிளாசுக்குப் போவோம்!'' என்ருன் ராமநாதன்.

மௌனமாக அவர்களேப் பின் தொடர்ந்தேன், இனி என்றுமே இது போன்ற சபலத்திற்கு இடங் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்தபடி.

## கண்ணன் கழகம்
### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லே)

பெயர் ....................

விலாசம் ....................

....................

பிறந்த தேதி ....................

(தேதி, மாதம், வருஷம்

அக்.-1, 1958




# உருப் பெருக்கும் கருவி

'மூர்த்தி'

சிறிய தேசப்படங்களை உங்கள் நோட்டுப் புத்தகத்தில் பெரியதாக வரைய வேண்டியிருந்தால் என்ன செய்கிறீர்கள்? கட்டங்கள் போட்டுக்கொண்டோ அல்லது உங்களுக்குத் தோன்றிய வகையில் சுமாராகவோ வரைகிறீர்கள் அல்லவா? உங்கள் சிரமத்தை ஓரளவிற்குக் குறைக்கக் கூடிய உருப் பெருக்கும் கருவி ஒன்றின் விவரங்களைக் கீழே காணுங்கள். சாதாரணமாகக் கிடைக்கும் சில துண்டுச் சட்டங்கள், ஒரே அளவுள்ள நூல் சுற்றும் கட்டைகள், மேலும் ஒரு சில சாமான்களைக் கொண்டு ஓர் உருப் பெருக்கும் கருவி (Eldugraph)யை அமைத்துவிடக் கூடும்.

இந்தக் கருவி சம ரூப முக்கோணங்கள், ஒரே மையமுள்ள வட்ட வில்கள் இவைகளின் குண விசேஷத்தை அடிப்படையாகக் கொண்டது.

PA, QB என்பவை (படம் 1) ½"×¼" அளவும், முறையே 16", 4" நீளமும் உள்ள சட்டங்கள். படத்தில் காட்டியவாறு அவற்றில் அளவுகள் குறிக்கப்படுகின்றன. ஒரே அளவுள்ள இரண்டு நூல் சுற்றும் கட்டைகளில் அவை ஆணிகள் அடித்துப் பொருத்தப்படுகின்றன. A B என்பது முக்கிய சட்டம். அது ¾"×¾" அளவும் சுமார் 15" நீளமும் உள்ளது. B-யிலிருந்து முறையே 2", 2·4", 3", 4", 6" அளவு தூரங்களில் துவாரங்கள் போடப்படுகின்றன. சரியாகப் பன்னிரண்டங்குல இடைவெளியில் இரண்டு நூல் சுற்றும் கட்டைகளும் இரண்டு ஆணிகளைச் சுற்றி ஆட்டமின்றிச் சுழலுமாறு அமைக்கப்படுகின்றன.

முடிச்சுகள் இல்லாத மெல்லிய நூல் கயிறு ஒன்று இக் கட்டைகளைச் சுற்றிக் கட்டப்படுகிறது. கயிற்றைக் கட்டுமுன் PA யும் QBயும் சுமாராக இணையாக (Parallel) இருக்கும்படி வைத்துக் கொள்ளவேண்டும். கயிற்றைக் கூடியவரை இறுகக் கட்டவேண்டும். இப்படிச் செய்த பிறகு ஏதாவதொரு சட்டத்தைச் சுழற்றினால் அதே அளவு மற்றொரு சட்டமும் சுழலும். அதாவது ஆரம்பத்தில் சட்டங்கள் இணையாக இருந்தால் பிறகு எப்போதும் அவை இணையாகவே இருக்கும்.

சட்டம் Q Bயில் ஒரு கூரான முனை Bயிலிருந்து சரியாக 3'' தூரத்தில் பொருத்தப்படுகிறது. சட்டம் P Aயில் ஒரு பென்சில் பிடிப்பு அமைக்கப்படுகிறது. இது அந்தச் சட்டத்தில் நகரக்கூடியது. இதைத் தகரத்தில் அமைத்துக்கொள்ளலாம். படம் 2-ஐப் பார்க்கவும்.

கடைசியாக அமைப்பைத் தாங்கக்கூடிய தாங்கும் கட்டையொன்று செய்யப்படுகிறது. (படம் - 3) அந்த மரத் துண்டின் நடுவே தலை நீக்கிய ஆணியொன்று அடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணியில், சட்டம் A Bயை அதில் செய்யப்பட்ட துவாரங்களுள் நுழைக்கலாம். அப்போது அச்சட்டம் அவ்வாணியைச் சுற்றி சுலபமாகச் சுழலும். கட்டையின் அடியில் நீட்டிக்கொண்டிருக்கும் ஆணிகளைக் கொண்டு அதனை ஒரு சித்திரப் பலகையில் பதிக்கலாம்.

உபயோகித்தல்: ஏதாவதொரு படத்தை நமக்கு மும்மடங்குப் பெரியதாக வரையவேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒரு சித்திரப் பலகையில் தாங்கும் கட்டை பொருத்தப்படுகிறது. கருவி, A Bயில் '3' என்று குறிக்கப்பட்ட துவாரத்தைச் சுற்றிச் சுழலுமாறு வைக்கப்படுகிறது. கூர்முனைக்குக் கீழே பெரிதாக்கப்படவேண்டிய படமும், பென்சிலுக்குக் கீழ் வெறும் காகிதமும் இருக்கின்றன. முதலில் சட்டங்கள் P Aயும் Q Bயும் இணையாக இருக்கும்படி மூலை மட்டங்களைக் (Set - squares) கொண்டு செய்துகொள்ளப்படுகின்றன.

நகரும் பென்சில் பிடிப்பு PAயில் 3க்கு எதிரில் கொண்டு வரப்படுகிறது. சட்டங்கள் இணையாகவும் அளவுகள் சரியாகவுமிருந்தால் இப்போது கூர்முனை, A Bயில் '3' என்று குறியிடப்பட்ட துவாரம், பென்சில் முனை இவையெல்லாம் ஒரு நேர் கோட்டில் அமையும். (படம் 4-ஐக் கவனிக்க) அப்படி




படம் 2




படம் 3




படம் 4

இல்லாவிட்டால் பென்சிலைச் சற்று முன் பின் நகர்த்தி, சரி செய்து கொள்ளலாம்.

இனி, கூர்முனையை படத்தின் ஓரத்தோடு, A Bயைச் சுழற்றியும் Q Bஐயச் சுற்றியும் பொறுமையுடன் நகர்த்திக்கொண்டே வந்தால் பென்சில் மும்மடங்கு பெரிய அளவில் அந்தப் படத்தை வரையும். இவற்றையெல்லாம் காட்டும் உருப் பெருக்கும் கருவியின் பொதுத் தோற்றம் படம் 4-இல் இருக்கிறது.

கருவி ஒரேயடியாகப் பென்சில் இருக்கும் பக்கம் சாயும். இதற்கு வேறு வழியில்லை. A B சட்டத்தில் கூர்முனை இருக்கும் பக்கத்தில் ஒரு கனமான பொருளை வைத்துக் கொள்ள வேண்டியதுதான். படத்தின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மாற்றும்போது சட்டம் A Bயை அதனைத் தாங்கும் கட்டையிலிருந்து தூக்கி நகர்த்தவேண்டும். இல்லாவிடில் அநாவசியமான கோடுகள் படத்தில் விழும். நூல் சுற்றும் கட்டை எப்போதும் செங்குத்தாக இருக்கவேண்டும். சுழலும் பாகங்களில் உராய்வு இருக்கக் கூடாது. கயிறும் தளர்ந்து இருக்கக் கூடாது.

மேலே கூறியதுபோல, படங்களை இரண்டு, நான்கு மடங்குகள் பெரிதாக வரையவேண்டியிருந்தாலும் தக்கபடி சட்டம் A Bயையும் பென்சில் பிடிப்பையும் அதனதன் இடங்களில் பொருத்திவிட்டு வரையலாம்.

உருப் பெருக்கும் கருவியை, பெரிய படங்களைச் சிறியதாக வரைய 'உரு சிறிதாக்கும் கருவி' யாகவும் உபயோகிக்க முடியும். அப்போது பென்சில், கூர்முனை இவை இடம் மாறியிருக்கும்: 1, 2, 3, 4, 5 என்ற குறிப்புகள் முறையே 1/1, ½, 1/3, ¼, 1/5 என்றும் ஆகும்.

# அக்பரும் பீர்பாலும்

'உஷா'

"எங்கே போகிருய், அஜீத்?''

திடுக்கிட்ட அஜீத் திரும்பிப் பார்த்தான். பீர்பால் அந்தப்புர வாயிலருகே நின்ருன்.

''ஒ.. தாங்களா? சலாம், பீர் பால்ஜீ! பாதுஷா மிக அவசரமாக அரைச் சேர் சுண்ணும்பு வாங்கி வரும்படி கூறினர். அதைத்தான் வாங்கிக் கொண்டு..''

''என்னது, சுண்ணும்பா?''

''ஆம். பீர்பால்ஜீ.. சுண்ணும்பு தான்.''

பீர்பாலின் உதடுகளில் சிறு புன்னகை நெளிந்தது. கண்களைச் சிமிட்டியவாறே, ''என்ன, இப்பொழுதுதான் வெற்றிலை மடித்துக் கொடுத்தாயாக்கும்!'' என்ருர்.

அஜீத் வியப்பினல் விழிகள் பிதுங்க, ''அது தங்களுக்கு எப்படித் தெரிந்தது? சற்று முன் வெற்றிலை மடித்துத் தந்தேன். உடனே சுண்ணும்பு வாங்கிவர உத்தரவிட்டார். ஓடிவந்தேன்'' என்ருன்.

''அப்படியா? சந்தோஷம், ஆனல் கொஞ்சம் சுண்ணும்பில் நிறைய வெண்ணெயைக் கலந்து எடுத்துப் போ.''

''வெண்ணெயா?''

''ஆமாம். இன்று நீ மடித்த வெற்றிலையில் சுண்ணும்பை அதிகம் தடவி விட்டாய். அதற்குத் தண்டனை தரத்தான் இந்த அரைச் சேர் சுண்ணும்பு.''

''தண்டனையா?'' அஜீத்திற்கு வாய் குழறியது.

''ஆமாம். தண்டனை என்ன தெரியுமா? இந்தச் சுண்ணும்பை விழுங்கும்படி கூறப் போகிருர். அவ்வளவுதான்.''

''பீர்பால்ஜீ..''

''சரி, சரி. நேரமாகி விட்டது. ஓடு ஓடு. நான் கூறியதை மறந்துவிடாதே!''

அஜீத் நன்றியால் உடலும் உள்ளமும் குழைய வேகமாய் ஓடி மறைந்தான்.

பீர்பால் மெல்ல மெல்ல உலாவியவாறே யமுனைக் கரையை நோக்கிச் சென்ருன். மெல்லிய அலை எழுப்பும் யமுனைப் பெருக்கத்தைக் கண்டதும் இரண்டொரு நாள் முன் நடந்த சம்பவம் நினைவுக்கு வரவே, தனக்குள் நகைத்துக் கொண்டான்.

* * *

பேகம் ஜோதிபாய்க்கும் இளைய பேகத்திற்குமிடையே அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. மதுரா






''என்னடா! போடா, ஒரு சினிமாவுக்குக்கூட வீட்டில் காசு தரமாட்டேங்கரு. பேசாமெ சாமியாராயிடலாம் போலிருக்கு.''

''அதுக்கும், மொட்டை அடிச்சிக்க, காவித் துணி வாங்க, இதுக்கெல்லாம் பணம் வேணுமே, தம்பி!''

---

வின் பிரசித்தி பெற்ற வைத்தியனொருவன் தன் மூலிகையின் சிறப்பைக் காண்பிக்க விரும்பி ஒரு செய்தியை வெளியிட்டான்.

'பனிக் காலத்தில், யமுனையில் இரவு முழுவதும் தண்ணீரிலேயே நின்றுகொண் டிருந்தாலும், அந்த மூலிகையைச் சாப்பிடுகிறவன், பூர்ண ஆரோக்கியத்துடன் காலையில் தண்ணீரிலிருந்து கரை ஏறி வருவான்!'

மகாராணி ஜோதிபாய் இதை உண்மையென வாதித்தாள். இளைய பேகமோ இது கட்டுக்கதை என மறுத்தாள். இருவரும் போட்டி நடத்திப் பார்க்க நிச்சயித்தனர். பரிசு ஒரு லக்ஷம் பொற்காசுகள்வரை உயர்ந்தது. வைத்தியன் மகிழ்ச்சியுடன் தானே இந்தப் போட்டிக்கு உட்பட இசைந்தான்.

பனி கொட்டும் அந்த இரவு முழுவதும், பாவம்! அந்த ஏழை வைத்தியன் யமுனையில் கழுத்தளவுத் தண்ணீரில் நின்றான். அவனுக்குக் காவலாகத் தார்த்தாரிச் சிப்பாய்கள் நின்றார்கள்.

பொழுது விடிந்தது. வைத்தியன் சிரித்துக்கொண்டே தண்ணீரிலிருந்து வெளியே வந்தான். இளைய பேகத்தின்முன் வந்து நின்றதும், அவள் திகைத்தாள். இந்தச் சிறு விஷயத்திற்காக ஒரு லக்ஷம் பொற்காசுகளை இழக்கப் பேகம் தயாராகயில்லை. பாதுஷாவிடம் ஏதோ கூறிவிடவே, இருவரும் அந்த வைத்தியனை ஏதேதோ கேட்டு விரட்டிவிட்டனர்.

அந்த வைத்தியன் அழுது கொண்டே பீர்பாலிடம் வந்தான்.

''பீர்பால்ஜீ, நான் ஓர் ஏழை வைத்தியன். மிக்க சிரமப்பட்டு, இதுநாள் வரை நான் சேர்த்த பொன்னையெல்லாம் செலவிட்டு அபூர்வ மூலிகைகளைத் தேடி மருந்து தயாரித்தேன். பாதுஷா மகிழ்ச்சி அடைவார், பேகம் பரிசு தருவார் என்ற எண்ணத்தில் நானே இவ்விஷப் பரீட்சைக்கும் உட்பட்டேன். யமுனையில் கால் கடுக்க, உடல் நடுங்க நின்றேன்; ஆனால்..'' ஏழை வைத்தியன் விம்மி விம்மி அழலானான்.

''பாதுஷா என்ன கூறினார்?''

''பீர்பால்ஜீ..நடந்ததைக் கூறுகிறேன், கேளுங்கள். பாதுஷா என்னை நோக்கி, 'இரவு முழுவதும் யமுனையில் நின்றேன் என்கிறீரே.. இந்தப்பனிக்காலத்துப்பின்னிரவில் எதைப் பார்த்துக்கொண் டிருந்தாய்?' என வினவினர். நான் பதில் கூறினேன். 'மகாராஜா, நானும் தங்கள் சயன அறையில் தீபமும் தான் இருளில் தனியே நின்றோம். அந்தத் தீபத்தின் ஒளிதான் எனக்குத் துணை நின்றது' என்றேன். இதில் என்ன தவறு பீர்பால்ஜீ?''

''ஏன் என்ன நடந்தது?''

''உடனே பாதுஷா, 'ஓஹோ.. அப்படியா விஷயம்? நீ, அந்த விளக்கின் ஒளியிலிருந்துதான் கதகதப்பான உஷ்ணத்தைப் பெற்றிருக்கிறாய். அந்த உஷ்ணத்தினால்தான், இந்தக் குளிரிலும் உன்னால்



தண்ணீரில் நிற்க முடிந்திருக்கிறது. உனக்குப் பரிசு கிடையாது' எனக் கூறி அனுப்பிவிட்டார். பீர்பால்ஜி நீங்களே கூறுங்கள். சயன அறையின், விளக்கிலிருந்து யமுனையின் நடுமத்தியில் நிற்கும் எனக்கு உஷ்ணம் எவ்விதம் கிடைத்திருக்க முடியும்? பாதுஷா இளைய சாகிபாவின் பேச்சைக் கேட்டு என்னைத் துரத்தி விட்டார்.''

பீர்பால் சிந்தனையில் ஆழ்ந்து போனான். இரண்டொரு நிமிடங்களுக்குப் பின், ''நல்லது, வைத்தியரே! நீர் போய் வாரும். உமக்கு அந்தப் பரிசு கிடைக்க நான் வழி செய்கிறேன். கவலைப்படாதீர்கள்'' என ஆறுதல் கூறி வழி அனுப்பி வைத்தான்.

* * *

**பா**துஷா பகல் உணவு அருந்தும் போது, கவிஞர் பைஜியும் பீர்பாலும் உடனிருப்பது வழக்கம். ஆனால் இன்று பீர்பால் வராமல் போகவே, பாதுஷா அஜீத்தை, உடனே பீர்பாலை அழைத்து வருமாறு அனுப்பினார்.

சற்றுத் தாமதித்து வந்த அஜீத் கூறினான். ''ஷா இன் ஷா.. பீர்பால் இன்று விரதமிருக்கிறார். அதற்காகக் கிச்சடி தயாரித்துக் கொண்டிருக்கிறார். அது முடிந்ததும் வருகிறாராம்.''

பாதுஷா மௌனமானார்.

பகல் கழிந்தது. மாலை மங்கியது. இன்னமும் பீர்பால் வரவில்லை. அன்று அரசாங்க அலுவல்கள், வழக்குகள், சிக்கலான பிரச்னைகள் யாவும் விவாதிக்கப்பட்டன. ஆயினும் பீர்பால் இல்லாதது பாதுஷாவிற்குப் பெரும் குறையாகப் பட்டது.

நான்காவது முறையாக அனுப்பப்பட்ட அஜீத் மீண்டும் அதே பதிலைக் கூறவே பாதுஷா சினந்

தெழுந்தார். அவருடைய சீற்றத்தைக் கண்டவர்கள் இன்று பீர்பாலுக்கு என்ன நேருமோ எனத் திகிலுற்றனர். மனம் மகிழ்ந்தவர்கள் இருவர்தான். இளைய பேகம் சாகிபாவும் அவருடைய அருமைத் தம்பி யூசுப்கானுந்தான்.

உருவிய வாளுடன் பாதுஷா பீர்பாலின் மாளிகையை நோக்கிப் புறப்பட்டார். மெய்காப்பாளர் பின்னே ஓடினர்.

தோட்டத்தின் நடுவே நின்ற பீர்பாலின் கோலத்தைக் கண்டதுமே பாதுஷாவின் கால்கள் இயங்கும் சக்தியை இழந்துவிட்டன. இரண்டு நீண்ட மூங்கில்களின் இரு முனைகளும் சேரும்படி சாய்வாக நிறுத்தி அதன் நடுவே ஒரு சட்டியைக் கட்டித் தொங்க விட்டிருந்தது. அச்சட்டிக்கு நேர் கீழே அடுப்பு புகைந்துகொண்டிருந்தது. பீர்பால் ஒரு பட்டு வஸ்திரத்தை மட்டும் இடையில் அணிந்து கொண்டு அந்த அடுப்பை ஊதிக் கொண்டிருந்தான்.

பாதுஷா சில நிமிடம்வரை இந்த நாடகத்தைப் பார்த்தவாறு நின்றார்.

''பீர்பால்..இதென்ன செய்து கொண்டிருக்கிறாய்?''

புகையினால் சிவந்த கண்களைத் தேய்த்துக் கொண்டே திரும்பிப் பார்த்த பீர்பால், ''ஷா இன் ஷா மன்னிக்கவும். இன்று விரதமிருக்கிறேன். என் கையினாலேயே இந்தக் கிச்சடியைச் சமைத்துச் சாப்பிட வேண்டும்'' என்றான்.

''ஐம்பது கஜ உயரத்தில் தொங்கும் சட்டியிலிருக்கும் கிச்சடி கீழே மூட்டிய நெருப்பில் வெந்து விடுமா! சபாஷ்! பீர்பல்!'' என நகைத்தார் பாதுஷா அக்பர்.

மெய்காப்பாளர்களும் நகைத்தனர்.

'மன்னிக்கவும், ஷா இன் ஷா.. கிச்சடி ஏன் வேகாது? பார்த்துக் கொண்டேயிருங்கள். இதோ தயாராகிவிடும்.''

''நடக்காது..இது நடக்கவே நடக்காது, பீர்பால்!'' பாதுஷா வேகமாகத் தலை அசைத்தார்.

பீர்பால் சற்றும் பதற்றமோ, கலக்கமோ இன்றி அமைதியான குரலில் கூறினான்: ''ஷா இன் ஷா, இருநூறு கஜ தூரத்திலிருந்த விளக்கின் ஒளியினால் யமுனையில் கழுத்தளவுத் தண்ணீரில் நின்ற வைத்தியனுக்கு உஷ்ணம் உண்டாகியிருக்குமானால் ஒரு மூங்கில் உயரத்திலிருக்கும் சட்டிக்கா உஷ்ணம் எட்டாது?''

மின்னல் கண்களைப் பறித்தது. பாதுஷாவிற்குப் புரிந்துவிட்டது. நெஞ்சத்தில் குமுறிய சீற்றம் கல கலவென நகையொலியாக வெளிவந்தது.

''ஷா இன் ஷா..''

''பீர்பால், நீர் வென்று விட்டீர்..அஜீத், உடனே அந்த வைத்தியனுக்கு லக்ஷம் பொற்காசுகள் கொடுக்க ஏற்பாடு செய்..''

''உத்தரவு ஷா இன் ஷா..''

அக்பர் பீர்பாலை நோக்கித் திரும்பினார். ''பீர்பால்..கொண்டு வா..அந்தக் கிச்சடியை. இருவருமாகச் சாப்பிடலாம்.''

பீர்பால் பிரமித்து நின்றார். அக்பரின் கரங்கள் அவரைத் தழுவிக் கொண்டன.

ஆனால் அங்கே..

ஒற்றர்கள் கொணர்ந்த செய்தியைக் கேட்ட இளைய பேகமும் யூசுப்பும் வெந்து தணிந்து கொண்டிருந்தார்கள். ஜோதிபாயிடம் பெற்ற தோல்வியைவிட இந்தத் தோல்வி மாபெரும் தோல்வியல்லவா?

பாதுஷாவிற்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த இளைய பேகத்தின் இமைகள் சோர்ந்த நேரத்தில்தான் அக்பர் அந்தப்புரத்தில் நுழைந்தார்.

இளநகைக்குப்பதிலாக வெம்மையான கண்ணீர் அவரை வரவேற்றது. விம்மலுக்கிடையே பேகம் கூறினாள்: ''ஷா இன் ஷா, உங்களை அந்த ஹிந்து மயக்கி விட்டான். அதனால்தான் என் யூசுப்பைக்கூட உங்களுக்குப் பிடிக்கவில்லை.'' உணர்ச்சி வசப்பட்ட பேகம் ஏதேதோ கூறிக்கொண்டேயிருந்தாள்.

அமைதியுடன் யாவற்றையும் கேட்ட பாதுஷா கூறினார்: ''பேகம் சாகிபா, என்னை அவ்வளவு முட்

[stamp] 21816 ... 600 008

டாளாகவா நினைக்கிறாய்? இறைவனின் அருள் என்னைப் பாதுஷாவாக்கியுள்ளது. என் ஆட்சியில் நான் ஹிந்துவை ஹிந்துவாக, முசல்மானை முசல்மானாகக் கருதி நடத்துவதில்லை, பேகம்சாகிபா! என் பிரஜைகள் ஒவ்வொருவரும் ஓர் இந்தியன்.''

''ஆனால் ஷா இன்ஷா..யூசுப் எவ்விதத்தில் பீர்பாலுக்குக் குறைந்தவன்? இதை மறந்து விடாதீர்கள் ஷா இன்ஷா..யூசுப் உங்கள் மதத்தவன்.''

''மதமா!'' திடுக்கிட்டவர்போல் வினவினார் பாதுஷா.

'மதம்; தர்மம்: என் மதம்' என முணு முணுத்தன அவர் உதடுகள். அவர் மேலே பேசவில்லை. மெல்ல எழுந்து சயன அறைக்குள் சென்று மறைந்தார்.

இளைய பேகம், சிலையாக நின்றாள்.

பொழுது புலர்ந்தது. முதல் முதலில் சந்தித்த மகாராணி ஜோதிபாயிடம் பாதுஷா வினவினார்: ''மகாராணி, மதம் என்பது என்ன?''

''பிறருக்குத் துன்பம் தராது. தன் ஆத்மாவை உயர்த்தும் பணிதான் மகாராஜா!''

''நல்லது பேகம் சாகிபா!''

நண் பகலில் பாதுஷா கவிஞர் பைஜியிடம் வினவினார்.

''கவிஞரே, மதம் என்பது என்ன?''

''இதயம் ஷா இன்ஷா.''

''நல்லது கவிஞரே. இதனால் தான் தர்மமும் அன்பும் உடன் பிறந்தவைகள் எனக் கூறுகிறீர்களோ?''

மாலை ஆயிற்று, பார்சி மொழியில் புலமை பெற்ற மௌல்வி பிதௌனியிடம் பாதுஷா வினவினார்.

''மௌல்வி சாகப் தர்மம் என்பது என்ன?''

''தியாகம், ஷா இன்ஷா!''

இரவாயிற்று. மாறுவேடத்தில் பதக் ஆர்சிக்ரியின் தெருக்களிலே மாறுவேடத்தில் சுற்றிக்கொண் டிருந்த ஜமால் மியான் கமால்மியானை நோக்கி வினவினார்.

''பீர்பால், தர்மம் என்றால் என்ன?''

''மகாபாரதம் ஷா இன் ஷா, தர்மத்தின் மற்றொரு உருவந்தான் மகாபாரதம். தாங்கள் குறிப்பிடும் தர்மம் அதாவது மத மிருக்கிறதே, அதுதான் இவ்வுலகத்தில் மிக மிக துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இதே மதந்தான் பாபச்செயல்களைத் தூண்டிவிட்டுப் புண்ணியத்தைக் காலடியில் போட்டு நசுக்கி விடுகிறது. ஷா இன்ஷா, இன்று வரை எவரும் மதத்தைச் சரிவர புரிந்து கொள்ளவில்லை. தர்மம் என்பது ஆண்களுக்கு வேறு, பெண்களுக்கு வேறு, குடிமகனுக்கு வேறு அரசனுக்கு வேறு, தர்மம் என்பது தான் வாழக் கற்க வேண்டிய கலை, இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு மகாபாரதம்தான் ஷா இன் ஷா. எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் இது புலப்படும். மனிதனுக்குத் தர்மத்தின் பொருளை எடுத்துக் காட்டுவது கீதை.''

தர்மம்..மதம்..எனத் தமக்குள் முணுமுணுத்த பாதுஷா மறுகணம், ''நல்லது கமால்மியான். நாம் நாளையிலிருந்து மகாபாரதம் கேட்க ஏற்பாடு நடக்கட்டும்'' என்றார்.

''உத்தரவு, ஷா இன்ஷா..''

இருளில் இரு உருவங்களும் மெல்ல மறைந்தன.


## கண்ணன்

சந்தா விவரம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா (தீபாவளி மலர் உள்பட) | ரூ. 4 00 |

வெளி நாடு

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | 5 00 |

தனிப் பிரதி 13 நயா பைசா

கலைமகள், மஞ்சரி, கண்ணன் மூன்றும் சேர்ந்த

| | |
|---|---|
| குடும்பச் சந்தா | ரூ. 14/25 |
| வெளி நாடு | ரூ. 18/00 |

# சூரியன் வருவது யாராலே?

**விமலா ரமணி**

ஆகாயத்திலே ஜகஜ் ஜோதியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் சூரியன் திடீரென மேகத்தில் மறைகிறுன்! காரணம் தெரியுமா? சந்திரன் தேய்ந்து வளருகிறுன்! இதன் காரணம் தெரியுமா? இந்த இரண்டு காரணமென்னும் திரைக்குப் பின் ஒளிந்திருக்கிறது ஒரு (கற்பனைக்) கதை! கேளுங்கள், கதையை!

தினந்தோறும் காலையில் கீழ் வானிலே உதிக்கும் ஆதவனும், இரவிலே தண்ணொளி பரப்பும் வெண்ணிலவும் சகோதரர்கள். அந்தக் காலத்திலெல்லாம், இப்போதுபோல் சந்திரன் தேய்ந்து வளரவில்லை. சூரியனைப்போல அவனும் முழு உருவமாகத்தான் வானில் பிரகாசித்துக்கொண்டிருந்தான்! ஆனுல் ஒரு வித்தியாசம். அண்ணனுடைய வேலை காலையில் துவங்கும். தம்பியின் வேலை மாலையில்!

சூரியனுக்கு மிகுந்த கர்வம்! யாரையும் அவன் லட்சியம் செய்ய மாட்டான்! ஏன், தன் அருமைத் தம்பியின்மீதுகூட அவனுக்கு நம்பிக்கை கிடையாது. அவ்வப்போது சந்திரனை ஏளனமாகப் பேசுவான்! ''என்னைக் கண்டால் உலகம் நடுங்குகிறது. என் அருகில் யாரும் வர முடியாது'' - என்று எகத்தாளமாகப் பேசுவான் சூரியன். சந்திரன், பாவம்! அண்ணுவை எதிர்த்துப் பேசத் தெம்பில்லாமல் வாயை மூடிக் கொண்டிருப்பான்!

ஒரு நாள்—

துர்வாச முனிவர் வேகமாக வான வீதியில் எங்கோ சென்று கொண்டிருந்தார். துர்வாச முனிவர்தான் கோபக்காரர் ஆயிற்றே! அப்போது பகல் நேரம். சூரியன் அக்கினிப் பிழம்பாய்க் கொதித்தான்! முனிவரால் சூரியனின் உஷ்ணத்தைத் தாங்க முடியவில்லை.



''சூரியா, நான் அவசரமாகப் போகிறேன். சற்று மேகத்தில் மறைந்துகொள். என்னுல் உன் உஷ்ணத்தைத் தாங்க முடியவில்லை'' என்றுர் முனிவர்.

சூரியனின் கர்வம் எல்லை புரண்டு ஓடியது. தன்னிடம்

முனிவர் யாசிக்கும்படி நேர்ந்து விட்டது என்ற மமதையில், அவர் கூறும் மொழிகளைக் கேட்காமல் மேலும் தன் கிரணங்களை அதிக உஷ்ணப் படுத்தினுன் அவன்!

இப்போது—

முனிவரின் கோபம் மூக்குக்கு மேல் போய்விட்டது. உடனே -

'என்னையா அவமதிக்கிருய்? பிடி இதோ, சாபம்!'' - என்றவர் - ''நீ இனி இல்லாமல் அழிந்து போவாய்'' என்ருர்.

அவ்வளவுதான்—

பட்டப் பகல் நட்ட நடு நிசியாகிவிட்டது! சூரியன் மறைந்துவிட்டான்! பூலோகத்தில் நடு வீதியில் நடந்து கொண்டிருந்த ஜனங்கள் வழி தெரியாமல் திண்டாடினுர்கள்! திடீர் மாற்றத்தைக் கண்டு உலகெங்கும் குழப்பம் நேர்ந்து விட்டது! எல்லோரும் விழித்தனர், என்ன நடந்தது என்று புரியாமல்!

சூரியன் பாவம்! தன் கர்வத்தால்தானே அழிந்து போனதை எண்ணி ஏங்கினுன். அவன் குரல்தான் கேட்டது! உருவம் காணவில்லை! செய்தி கேட்டுச் சந்திரன் ஓடி வந்தான்! அண்ணுவிற்கு நேர்ந்த துன்



## கசியும் பேனாவுக்கு கை கண்ட மருந்து

நண்பர்களே! உங்களில் சிலர் மை கசியும் பேனாக்களை வைத்துக் கொண்டு கையையும் சட்டைப் பையையும் பாழ்படுத்திக் கொள்வதைப் பார்த்திருக்கிறேன் நம் உடம்புக்கு ஏதாவது வியாதி கண்டால் 'டானிக்'கோ, 'வில்லை'யோ சாப்பிட்டுக் குணப்படுத்துகிறோமல்லவா? அதுபோல மை கசியும் உங்கள் பேனாக்களுக்கு என் கை கண்ட மருந்தை உபயோகித்துக் காப்பாற்றுங்கள்.

கசியும் பேனாக்கள் வைத்திருக்கும் குழந்தைகள் உடனே பேனாவின் கழுத்தைப் பிடித்துத் திருகி வெளியே எடுங்கள். ஒரு மாத்திரை அளவு வெற்றிலையில் தடவும் சுண்ணாம்பை எடுத்து பேனாவின் கழுத்துத் திருகுவரை சுற்றிலும் தடவுங்கள். திரும்பவும் பேனாவின் உடம்பையும் கழுத்தையும் இணைத்து 'மை கசிகிறதா?' என்று பாருங்கள். கசியவே கசியாது. ஆனால் இது நிரந்தரமான நிவாரணமன்று. நம் உடம்புக்கு ஒரு முறை வியாதி வந்து, மருந்து சாப்பிட்டபின் குணமாகிவிட்டாலும் திரும்பவும் வியாதி வராமல் இருப்பதில்லை யல்லவா? அது போல உங்கள் சிகிச்சை பெற்ற பேனாவும் சில நாட்களுக்குப்பின மை கசிய ஆரம்பிக்கலாம். அப்பொழுது நீங்கள் மீண்டும் இதே முறையைக் கையாண்டு வெற்றி பெறலாம். —கே. சொக்கலிங்கம்

---

பத்தை எண்ணி வருந்தினான். முனிவரின் காலிலே விழுந்து, சாபத்தை மாற்றும்படி தம்பி, தன் அண்ணனுக்காக வேண்டினான்!

முனிவரின் கோபம் சற்றுத் தணிந்தது. ஆனால் அவர் சொன்னார்—''சந்திரா, கொடுத்த சாபம் கொடுத்தது தான். நான் சூரியனுக்குக் கொடுத்த இந்தச் சாபத்தை வேறு யாராவது மன மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டால், அவன் இந்தச் சாபத்திலிருந்து விடுதலை பெறுவான்.''

சந்திரனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ''நான் ஏற்றுக் கொள்கிறேன் இந்தச் சாபத்தை மனப்பூர்வமாய்'' - என்றான். அவ்வளவுதான்—

சந்திரன் மறைந்தான். சூரியன் பிரகாசித்தான். பூலோக வாசிகளும் நிம்மதியாக மூச்சு விட்டனர்!

தன் தம்பி தன்மீது வைத்துள்ள அன்பை எண்ணிச் சூரியனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது! தன்னால் தன் தம்பிக்கு நேர்ந்த துயரத்தை எண்ணி மனமொடிந்த அவன் முனிவரின் காலில் விழுந்து தன் தம்பியின் சாபத்தைக் குறைக்குமாறு வேண்டினான்.

முனிவரும் யோசனையில் ஆழ்ந்தார். பிறகு—

''உன் தம்பிக்காக நான் என்னுடைய சாபத்தை மாற்றுகிறேன். நல்லவன் அவன். எனவே நான் கொடுத்த சாபத்தின்படி அவன் மாதத்தில் ஒரு நாள் வானத்திலிருந்து மறைந்துவிடுவான். மற்ற நாட்களில் தேய்ந்தும், வளர்ந்தும் வருவான்'' என்று கூறிவிட்டு, வேகமாகத் தன் வழி நடந்தார்!

அதனால்தான் அமாவாசை அன்று சந்திரன் ஆகாயத்தில் இடம் பெறுவதில்லை! அன்று முதல் சூரியனுக்குத் துர்வாச முனிவரைக் கண்டால் பயம். அதுமட்டும் அல்ல. அவரைப் பற்றிய எண்ணம் மனத்தில் தோன்றினால் கூடப் போதும்; பயம் கொள்வான் சூரியன். மேகத்திற்குள் தன் முகத்தைப் புதைத்துக்கொள்வான்! அப்போதுதான் நாமும் ''மோடம் போட்டிருக்கிறது'' என்று கூறுகிறோம்!

## 17. ஓர் இரவில்....

ஞாயிற்றுக்கிழமை காலையில் பட்டாபி, ஸ்ரீதரனையும் ஸம்பத்தையும் கூப்பிட்டார்..

''ஸம்பத்! நாளை இரவு மலேயாவுக்குக் கப்பல் புறப்படுகிறது. அதில் அநேகமாக அவர்கள் கிளம்பினாலும் கிளம்பலாம். அதனால் இன்று சுறுசுறுப்பாக இருந்து முதலில் அந்தப் பெண்ணை மீட்க வேண்டும். பிறகு அவர்களைத் தடுத்து 'அரெஸ்ட்' செய்யவேண்டும்..'' என்றார் பட்டாபி.

''உங்களுக்கு எப்படியப்பா தெரிந்தது அவர்கள் ஊருக்குக் கிளம்புவது?''

''எல்லாம் நம்ம ஸி. ஐ. டி தான் சொன்னார். அதனால் இன்று நீங்கள் இருவரும் போய் அந்தப் பெண்ணை மீட்க வழியைப் பாருங்கள். அதுதான் அவசியம்.''

''அந்தப் பெண் எங்கே இருக்கிறாள் என்றே தெரியவில்லையே, அப்பா!''

''அநேகமாகப் பழைய பங்களாவிலேதான் சிறை வைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அன்று நாங்கள் போன பொழுது அவள் எப்படியோ அடுத்த வீட்டின் வழியாகத் தப்பியிருப்பாள். ஆனால் அவள் அப்படித் தப்பியிருந்தாலும் நமக்குத் தெரிந்துவிடும். அடுத்த வீட்டில் சுப்புவின் தகப்பனார் அங்கிருந்து போகவே இல்லை என்று உறுதியாகக் கூறுகிறார். அநேகமாக அவள் அன்று ஏதோ ரகசிய அறையில் ஒளிந்துகொண்டிருந்திருக்கவேண்டும்.''

''தெரியும் அப்பா எனக்கு அந்த இடம். இன்று இரவு எப்படியேனும் அந்தப் பெண்ணை அழைத்து வந்துவிடுகிறேன்'' என்றான் ஸம்பத்.

பட்டாபி ஸ்டேஷனுக்குப் போனார்.

''ஸ்ரீதரா! ராத்திரி பூரா நமக்கு வேலைதான்! எப்படியாவது இன்னிக்கு அந்தப் பெண்ணைக் கூட்டி வந்துவிட வேண்டும். நாளைக்கு அவர்கள் கிளம்பும் நேரத்திற்கு 'அரெஸ்ட்' செய்துவிடலாம்..''

''சரி! ராத்திரி அன்றைக்கு மாதிரி கிளம்பலாம்..''

இருவரும் இரவுக்கான திட்டங்களை வகுத்துக்கொண்டார்கள்.

''அன்றைக்கு மாதிரி அவ்வளவு சீக்கிரம் போகவேண்டாம், பதினொரு மணிக்குக் கிளம்புவோம்..'' என்றான் ஸம்பத்.

ஸ்ரீதரனும் ஒப்புக்கொண்டான்.

ஞாயிறன்று இரவு பத்தரை மணிக்கு ஸம்பத்தும் ஸ்ரீதரனும் மோட்டார் ஸைக்கிளில் கிளம்பினார்கள். ஸம்பத் ஞாபகமாகச் சாவிக்கொத்தை எடுத்துப் பைக்குள் போட்டுக்கொண்டான். அந்த சாவிக்கொத்தில் உள்ளவற்றில் ஏதேனும் ஒன்றாவது பிரயோசனப் படாதா என்ற நோக்கத்தில்தான். இருவரும் அந்தக் 'கறுப்புக் கண்ணாடி' பங்களாவுக்குச் செல்லும் பொழுது மணி பதினொன்று ஆகிவிட்டது. மோட்டார்




பரிசுபெற்ற தொடர்கதை!

சைக்கிளை அடுத்த வீட்டிற்குள் கொண்டுபோய் நிறுத்தினான். பிறகு இருவரும் அடுத்த வீட்டின் கதவைத் திறந்துகொண்டு வந்தார்கள். நல்லவேளையாக அங்கே வேலைக்காரன் இல்லை. ஸம்பத் ஸ்ரீதரனிடம், ''ஸ்ரீதரா! நீ கீழே இரு. அதாவது வாசலிலேயே இருந்து யாராவது வருகிறார்களா என்று கவனித்துக்கொண் டிருக்கவேண்டும். யார் வந்தாலும் ஒரு சீட்டி அடி. உஷாராகிவிடுகிறேன்'' என்றான்.

''சரி, கதவைத் திற. நீ உள்ளே போனதும், நான் கதவைப் பூட்டிச் சாவியை வைத்துக்கொள்கிறேன். நடுவில் யாராவது வந்தால் சந்தேகப்படாமல் இருக்கவேண்டுமல்லவா?''

''சரி!....பூட்டிச் சாவியை வைத்துக்கொள். நான் வந்தபின் கதவைத் திறக்கலாம். அந்த ஆட்கள் வந்தாலும்..''

''சரி! சரி! சீக்கிரம்..'' என்றான் ஸ்ரீதரன்.

ஸம்பத் சாவிக்கொத்தில் ஒவ்வொரு சாவியாக உபயோகித்து, கடைசியாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனான். வெளியே ஸ்ரீதரன் கதவைப் பூட்டிக்கொண்டு மறைவாக ஒரு செடியின் மறைவில் நின்றான்.

அதே சமயம் அடுத்த வீட்டுக் கொல்லைக் கதவு திறந்து, திறந்து மூடிக்கொண்டது. உள்ளேயிருந்து சுப்பு மெள்ளமெள்ள ஏணியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். அந்த 'வேர்க்கடலை' ஏன் வரவில்லை என்று எண்ணியது அவன் மனம். ஏணியுடன் கொல்லைப் பக்கத்திலிருந்து அடுத்த வீட்டு மாடியைப் பார்த்தான். துரதிருஷ்டவசமாகப் பஞ்சு ஸார் அவனைக் கவனிக்கவே இல்லை. சுப்புவின் கண்களுக்கு அடுத்த வீட்டு மாடியில் யாரோ உலாவுவது நன்கு தெரிந்தது. உடனே, அது 'வேர்க்கடலை'தான் என்று தீர்மானம் செய்துவிட்டான். ஓசைப்படாமல் அடுத்த வீட்டுக் கொல்லைக்குள் ஏணியைச் சுவரில் சாத்தி ஏறி நின்றுகொண்டான். ஒவ்வொரு நிமிஷமும் ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மாடிக்கு நேராகச் சென்ற ஸம்பத், கையிலிருந்த 'டார்ச்' மூலம் ஓர் இடம் விடாமல் தேடினான். அந்தப் பைத்தியக்காரப் பெண்ணைக் காணவே இல்லை. அந்தப் பெண் 'கல்கத்தா'வை அவர்கள் கொண்டுபோய்விட்டார்களோ? கடைசியாகக் கட்டிலின் அடியில் இருக்கும் அந்த ரகசிய அறையைத் திறந்து பார்த்துவிட வேண்டியதுதான். அதையும் திறந்து பார்த்தாகிவிட்டது. பிரயோசனம் இல்லை. அதில் வேறு ஏதோ பெட்டிகள் எல்லாம் இருந்தன. ஸம்பத் எல்லா இடத்திலும் தேடியாகிவிட்டது. எல்லாம் வீண்தான்.

அதே சமயம்—

வாசலிலிருந்து '..உஸ்..' என்று சீறிக்கொண்டு வந்தது 'சீட்டி'யின் சத்தம், ஆகா!.. ஸ்ரீதரன்தானா அது? ஸம்பத் 'விர்'ரென்று ஒரு பீரோவின் பின்னால் மறைவாக நின்றுகொண்டான். ஸ்ரீதரன்தான் புதரின் மறைவிலிருந்து அவ்வாறு சீட்டி அடித்தான். ஆமாம்..அங்கே வந்தவன் 'கறுப்புக் கண்ணாடி' ஆள்தான்! இரவில்கூட, கறுப்புக் கண்ணாடி அணிந்துகொண்டு வந்தான் அவன். ஸ்ரீதரனுக்கு 'குபீ'ரென்று உடல் வியர்த்தது. சுவரோடு சுவராக இருட்டில் பதுங்கினான். வந்தவன் எதிராஜ்தான்! நேராக வந்து, பூட்டைத் திறந்து உள்ளே போய் விளக்கைப் போட்டான். அவன் மாடிப் படியில் ஏறிப்போகும் சத்தம் தெளிவாகக் கேட்டது. ஸம்பத் மாடியில் இருக்கிறான்! ஸ்ரீதரனுக்கு மனம் 'திக்திக்'கென்று அடித்துக் கொண்டது. எதிராஜ் நேராக மாடிக்குப் போனான். விளக்குப் பளீரென்று எரிந்தது. பின்புற ஜன்னலை மட்டும் திறந்துவைத்தான். ஆமாம்! அங்கேதான் சுப்பு ஏணியின்மேல் ஏறி நின்றுகொண்டு காத்துக்கொண் டிருந்தான்! அந்த எதிராஜ் அதை கவனிக்கவேயில்லை. முக்கியமான பொருள்களை மட்டும் பொறுக்கி எடுக்க ஆரம்பித்தான். இரும்புப் பீரோவைத் திறந்து எதை




எதையோ எடுத்தான். ஒரு சின்ன மூட்டையைப் பிரித்தான். ஸம்பத் ஒவ்வொரு நிமிஷமும் அவனைக் கவனித்துக்கொண் டிருந்தான் மறைவிலிருந்து. நகைகள்! அவ்வளவும் நகைகள். அவன் கையில் பளபளவென்று மின்னியது ஒரு நெக்லெஸ். சுமார் பதினைந்தாயிரம் பெறும் அது! ஏழு வர்ணங்களை வாரி வீசியது. அலட்சியமாக அந்த நகையைத் தூக்கிப்போட்டான், மேஜைமீது ஒரு புன்னகையுடன். அந்த மேஜை ஜன்னலின் அருகில், அதை ஒட்டி இருந்தது!

மறுபடியும் திரும்பிப் பீரோவிலிருந்து எதையோ எடுக்கப் போனான். எடுத்துக்கொண்டு திரும்பியபோது அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. மேஜைமீது சற்றுமுன் அவன் தூக்கி எறிந்த அந்த நகை எங்கே? எப்படி அது மாயமாக மறைந்துவிட்டது? சுப்பு ஏணியின்மேல் ஏறிக் காத்துக்கொண் டிருந்தானல்லவா! அவன் தான் மெல்ல மெல்ல எழும்பி அந்த வைர நெக்லெஸை லாவி விட்டான். அவன் அதைக் கையில் எடுத்துக்கொண்டு ஓர் ஐந்து

நிமிஷ நேரந்தான் ஆனந்தப் பட்டுக்கொண் டிருந்திருப்பான். அவன் பின் மண்டையில் அந்த சமயம் பலமான அடி ஒன்று அவன் தலையில் விழுந்தது. சுப்பு அலறிக் கொண்டு தடாலென்று விழுந் தான். அவன் தலையிலிருந்து ரத்தம் பீரிட்டுக்கொண்டு வெளியே வந் தது. சுப்பு ரத்தவெள்ளத்தில் விழுந்தான். அந்தச் சத்தத்தைக் கேட்டு எதிராஜ் மளமளவென்று மாடியிலிருந்து இறங்கி கீழே ஓடி வந்தான். கொல்லைப்புறம் ஒரே ஓட்டமாக ஓடினான். அங்கே— கையில் தடியுடன் நின்றுகொண் டிருந்தான் துரை!..

''நான் கொல்லைப்புறமாக வந் தது நல்லதாகப் போய்விட்டது'' என்றான் அவன்.

அந்த ஒரு கணத்தைப் பிர யோசனப் படுத்திக்கொண்டு ஸ்ரீதரன் வீட்டினுள் ஓடினான். அதேசமயம் ஸம்பத்தும் மாடிப் படி வழியே வேகமாக இறங்கி வந்தான்.

''ஸம்பத்! வா! சீக்கிரம்.. சீக்கிரம்..'' என்றான் ஸ்ரீதரன்.

இருவரும் மாடிப்படி வழியே கீழே இறங்கி வந்தபோது, வெளியே யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. யார் வருகிறார் கள்? ஸம்பத் ஸ்ரீதரன் இருவரும் மாடிப்படிகளின் அடியில் இருந்த மறைவிடத்தில் ஒளிந்துகொண் டார்கள்.

விநாயகம், பதினொன்றரை மணிக்குத் தன் திட்டப்படி வந்து சேர்ந்தான். அவனுக்கே ஆச்சரிய மாக இருந்தது. வீட்டுக் கதவு திறந்து கிடந்தது. வாசலில் வேலைக்காரனையும் காணவில்லை. அங்குமிங்கும் பார்த்தான். 'விருட்'டென்று உள்ளே நுழைந் தான். அதே சமயம் யாரோ இருவருடைய பேச்சுக் குரல் நெருங்கி வந்துகொண் டிருந்தது. விநாயகம் யோசித்தான். மறு நிமிஷம் அவன் அங்கிருந்த கட்டி லுக்கடியில் போய் ஒளிந்துகொண் டான். துரையும் எதிராஜும் வந்தார்கள் உள்ளே.

''என்ன துரை! கொஞ்சம் யோசிக்கக்கூடாது? போட்டுவிட் டாயே ஒரே போடாக'' என்றான் எதிராஜ்.

''சரிதான் போ! சீக்கிரம் வேலையைக் கவனி, தலை போகிற காரியம்!''

''சரி! முதலில் என்ன சொல் கிறாய்? காரை முனங்கில் நிறுத்தி விட்டு வந்திருக்கிறேன்.''

''முதலில் 'கரன்ஸி'யையெல் லாம் எடுத்துச் 'சேம்பரி'ல் வை. அந்தப் பெட்டியெல்லாம் 'பாக்' பண்ணு.''

ஏகப் பெட்டியாகிவிட்டது. கடைசியில் அந்தப் பெட்டியில் 'கல்கத்தா'வை வேறு ஏற்றியாக வேண்டும்.''

''நான்தான் சொல்கிறேனே, எதிராஜ் முடிந்தால் பார்.. இல்லாவிட்டால் ஏன் கட்டிக் கொண்டு அழுகிறாய்?''

''என்னவோ நான் நினைத்தது வேறு..''

''முடியாவிட்டால், அந்தப் பெட்டியைப் பிடித்துக் கடலில் தள்ளிவிடு. 'கல்கத்தா'வைக் கடல் விழுங்கட்டும்!''

எதிராஜ் மௌனமாக இருந் தான். ஒளிந்திருந்த ஸம்பத்தின் உடல் பயத்தினால் ஒருமுறை நடுங் கியது.

''எதிராஜ்! யோசனை செய் யாதே! இன்றிரவே தள்ளிவிட்டு நிம்மதியாக இரு!''

''அது முடியாது துரை!.. நாளைக்கு அந்தப் பெட்டியையும் கப்பலில் ஏற்றுவார்களா என்று 'ட்ரை' பண்ணுவோம். ரொம்ப சந்தேகப்பட ஆரம்பித்தால், பேசாமல் பெட்டியைத் தள்ளி விடலாம்.''

அதே சமயம் கட்டிலுக்கடி யிலிருந்து ஒரு பெருமூச்சு வெளி வந்தது. துரை கீழே குனிந்தான். அங்கே பதுங்கியிருந்தது விநாயக மல்லவா? துரை ஒரே பாய்ச்சலில் அவன்மீது பாய்ந்து அவனைத் தள்ளினான். இருவரும் புரண்டார் கள். எதிராஜ் துரையின் உதவிக்கு வந்தான் இருவருமாகச் சேர்ந்து விநாயகத்தைக் கட்டிப்போட்டார் கள்.

''இப்படித்தான் நேற்று 'வேர்க் கடலை'ப் பையனைப் பிடித்தேன்.

நாய்ப் பயல்! என்னிடம் விளையாடுகிறான்!'' என்றான் துரை. ஸம்பத் மறைந்திருந்த இடத்திலிருந்து துரை, எதிராஜ் இவர்களுடைய கால்மட்டும்தான் தெரிந்தது.

சிறிது நேரம் துரையும் எதிராஜும் தங்கள் திட்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். ஸம்பத் ஒன்றுகூட விடாமல் அவற்றைக் கேட்டான். பிறகு அவர்கள் இருவரும் மாடிக்குப் போனார்கள். அவர்கள் போனதும் ஸம்பத்தும் ஸ்ரீதரனும் வெளியே வந்தார்கள்.

விநாயகம் ஆச்சரியம் அடைந்து வாயைத் திறந்து திறந்து மூடினான். ஸம்பத் தன் வாயில் விரலை வைத்து அவனை அடக்கினான். அவன் திரும்பியபோது மேஜையின் மேல் வைத்திருந்த அந்தக் கறுப்புக் கண்ணாடி அவன் கவனத்தைக் கவர்ந்தது. கறுப்புக் கண்ணாடியை எடுத்துப் 'பாக்கட்'டில் போட்டுக்கொண்டான் ஸம்பத். இருவரும் ஓசைப்படாமல் அவசரமாக வெளியேறினார்கள்.

(அடுத்த இதழில் முடிவுறும்)

---

# சோலை வாழ்க !

மானை வந்து பாருங்கள்
மருண்டு மருண்டு பார்க்குது!
தேனை உண்ணும் வண்டுகள்
தெம்பாய் மலரை நாடுது!

மயிலை வந்து பாருங்கள்
மகிழ்ந்து தோகை விரிக்குது!
குயிலின் இனிமைக் கீதந்தான்
குதூகலிக்கச் செய்யுதே!

வெள்ளை வாத்து பாருங்கள்
வரிசை யாகப் போகுது
கொள்ளை கொள்ளும் காட்சிகள்
கொண்ட சோலை தன்னிலே!

ஓடும் ஓடை பாருங்கள்
ஒன்று கூடி வாருங்கள்!
வாடும் மக்கள் களித்திட
விளங்கும் சோலை வாழ்கவே!

—பி. வி. கிரி.

# காலம்சொல்லும் கதை

**கோவி. மணிசேகரன்**

மேலைநாடுகளில் பள்ளி வாழ்க்கையின் சில படிகளை ஏறிய சிறுவர்களை நோக்கி அவர்கள் நாட்டைப் பற்றியும் மன்னர்களைப்பற்றியும் கேட்டால், தயங்காமல் தேங்காய் உடைத்ததுபோல் பதில் சொல்வார்களாம். அந்த அளவிற்கு நாமும் இருக்க வேண்டுமல்லவா? ஆம்; நாம் இருந்தே ஆகவேண்டும். அப்போதுதான் நாம் முன்னேற முடியும்.

அலெக்ஸாண்டர் என்றால், கிரேக்க வீரன் என்று சொல்லத் தெரியவேண்டும்

நெப்போலியன் என்றால், பிரஞ்சு வீரன் என்று சொல்லத் தெரியவேண்டும்.

செங்கிஸ்கான் என்றால், மங்கோலிய வீரன் என்று சொல்லத் தெரியவேண்டும்.

ஜூலியஸ் ஸீஸர் என்றால், ரோம நாட்டு வீரன் என்று தெரியவேண்டும்.

அசோகன் என்றால் மௌரிய வீரன் என்று சொல்லி மகிழ வேண்டும்.

**இளம்வழுதி** என்றாலோ பாண்டிய மாவீரன் என்று சொல்லித் தலை நிமிர வேண்டும்.

ஆம்; பாண்டிய மன்னர் இளம்வழுதி சிறந்த வீரர்தான்; அத்துடன் தமிழ்ப்புலமையும் உடையவர்; தெய்வ பக்தி நிறைந்தவர். தாம் உண்ணும் உணவைப் பிறருடன் பகிர்ந்து உண்ண வேண்டும் என்று எண்ணுபவர். கோபம் பொல்லாதது என்று அறிவுறித்துபவர். பழி, பாவங்களுக்கு அஞ்சுபவர். சிறப்பான காரியங்களைச் செய்து அழியாப் புகழை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடையவர்.

இத்தனையும் இவர் பாடிய **பொருண் மொழிக் காஞ்சி** என்ற பாடலை, புறநானூறு என்ற சங்க இலக்கியத்தில் கண்டால் தெரியவரும்.

பொருண் மொழிக் காஞ்சி என்பதற்கு என்ன பொருள் என்று கேட்கிறீர்களா?

இந்தப் பிறவியிலும், மறு பிறவியிலும் பயன்படக்கூடிய அறிவுரைகளை ஒருவனுக்குச் சொல்லுதல்.

இளம்வழுதிப் பாண்டியர் சொன்னார்; அதன்படி நடந்தார். சொல் வேறு, செயல் வேறு என்று அக்காலத் தமிழ் மக்கள் எப்போதும் இருந்தது கிடையாது.

இவர் கடைச்சங்க நாளில் வாழ்ந்தவர். பெரும் அறிவாளியாக வாழ்ந்ததால்தான் இவருக்கு 'இளம் பெரு வழுதி' என்ற பெயர் கிடைத்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இம்மன்னருடைய பாடல்களைப் பரிபாடல், புறநானூறு ஆகிய இரு தமிழ் இலக்கியங்களிலும் காணலாம்.

இவர் சிறந்த வைணவர், திருமாலை வழிபடுபவர். திருமாலிருஞ்சோலைமலை எனும் மலையின் பெருமையையும், அங்கு எழுந்தருளிய கண்ணபிரான், பலதேவன் ஆகிய இருவருடைய பெருமையையும் தம்முடைய பாடலில் விளக்கியுள்ளார்.

இளம்பெருவழுதி சிறந்த கடற்படை வீரர். இவர் கடலுள் இறந்துவிட்டதாக வரலாறு.



கடல் கடந்த நாட்டினருக்கும், இவருக்கும் போர் நிகழ்ந்திருக்கவேண்டும். போர் நடுக்கடலில் துவங்கி மும்முரமாக நடந்திருக்கவேண்டும். வெற்றி பெற்றுத் திரும்புகையில் பகைவர்களுடைய சூழ்ச்சியால், இவருடைய கப்பல் மூழ்கி இருக்க வேண்டும். அப்படியும் இல்லையென்ருல், கடல் கடந்த நாட்டுக்கு இவர் கப்பல் செலுத்தி ஒற்றறிய மாறு வேடத்தில் தூது சென்றிருக்க வேண்டும். அப்படிச் சென்ற போது, ஒன்று பகைவருடைய சூழ்ச்சியால் கப்பலுடன் மூழ்கி இருக்கவேண்டும்; அல்லது, புயலால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும். எதையும் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

**க**டலுள் மாய்ந்த இளம் பெருவழுதிக்கு அடுத்து, **அறிவுடை நம்பிப் பாண்டியர்** அகக் கண் முன்னே நிற்கிருர்.

வழிவழிப் பாண்டிய மன்னர்களைப் போன்றே அறிவுடை நம்பியும் சிறந்த தமிழ்ப் புலமை நிரம்பியவர். இதனை அகநானூறு, புறநானூறு,

நற்றிணை, குறுந்தொகை ஆகிய தமிழ் இலக்கியங்களில் இவர் பாடிய பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

வீரமும் அறிவும் நிரம்பிய இவர் குழந்தைகளுடன் பேசுவதிலும் விளையாடுவதிலும் பேரின்பம் கண்டவர். தாம் பெற்ற தமிழ் இன்பத்திற்கு அடுத்தாற்போல் குழந்தைகளின் மழலையில் இன்பம் கண்டவர்.

தெய்வத் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவனார்,

**"பெறுமவற்றுள் யாமறிவது**
**இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற"**

என்றார்.

அதாவது, பெறத் தகுந்த செல்வங்களில் அறிய வேண்டியவைகளை அறிந்த நல்ல பிள்ளைகளைப் பெறுவதைத் தவிர, மற்றவைகளைத் திருவள்ளுவனார் மதிப்பதில்லையாம். என்ன அழகான கருத்து! அறிய வேண்டாதவைகள் எத்தனையோ இருக்கின்றன. ஒரு சினிமா நடிகையின் வாழ்க்கை வரலாறு அறிந்து கொள்வதில் சிலர் துடியாகத் துடிக்கின்றனர். அதே நேரத்தில் அறிவுடை நம்பி காலத்தில் வாழ்ந்த பிசிராந்தை யார் என்பவர் யார்? அவர் வாழ்ந்த ஊர் பிசிர் என்ற ஊர் என்கிறார்களே! அது எங்கு இருக்கிறது? சோழ நாட்டிலா, பாண்டிய நாட்டிலா என்பன போன்ற அறிய வேண்டியவைகளை அறிய மறுக்கின்றனர்.

வள்ளுவர் காட்டிய அரிய பெரிய செல்வமான பிள்ளைச் செல்வத்தில் பெரிதும் மனத்தை ஈடுபடுத்தியவர் அறிவுடை நம்பிப் பாண்டியர்.

இதனைப் புறநானூற்றுப் பாட்டொன்றில் அழகாகக் குறிப்பிடுகிறார்:—

''பெரிய பணக்காரனாக இருக்கலாம். விருந்துண்டு வாழ்வதே வாழ்வு என்ற கருத்துக் கிணங்க பலருடன் கூடி உண்ணும் வாழ்க்கையைப் பெற்றவனாக இருக்கலாம். ஆனால், தத்தித் தத்தி நடந்துவந்து, மெல்லிய கையை நீட்டி, நாம் உண்ணும்போது அந்தச் சோற்றைக் கிண்டிவிட்டுத் தரையிலும், தன்னுடைய உடலிலும் வாரிப் பூசிக்கொள்ளும் பிள்ளைச் செல்வத்தைப் பெறாதவர்கள் உயிர் வாழ்ந்தே பயனில்லை.''

**"அமிழ்தினும் ஆற்ற இனிதே**
**தம்மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்"**—என்று திருவள்ளுவனார் கூறிச் சென்றதை அறிவுடை நம்பியும், தம்முடைய தமிழ் நாவில் சுவைத்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா?

பாண்டியர் அறிவுடை நம்பிக்கு ஏன் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்திருக்கக் கூடாது? அந்தப் பெரும் ஆசையின் காரணமாக மனம் நொந்து மேற்படியான கருத்தடங்கிய பாடலை ஏன் எழுதியிருக்கக் கூடாது என்று கேட்கலாம்

ஆனால்—

குழல் இனிது, யாழ் இனிது என்று கூறுபவர்கள் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்காதவர்கள் என்று கூறி ஆழ்ந்து அநுபவித்த திருவள்ளுவர், பிள்ளைச் செல்வம் அல்லாதவராக இருக்கமுடியாதல்லவா?

அப்படி என்றால், அவரைப் பின்பற்றிய பாண்டியர் அறிவுடை நம்பியும் உங்களைப் போன்ற நல்ல பிள்ளைச் செல்வங்களைப் பெற்றவர்தான் என்பதில் இம்மியும் ஐயமில்லை;

# தம்பிப் பாப்பா!

'சசிதேவன்'

தம்பிப் பாப்பா பொறந்திருக்கான்
வந்து பாருங்க;

தங்கப் பொம்மை போலேஅவன்
இருக்கு றுனுங்க!

கையைக் காலே அப்படி இப்படி
உதைக்கி றுனுங்க.

கன்னங் குழிய சின்னப்பய
சிரிக்கி றுனுங்க.

'குவா குவா' என்று சத்தம்
குடுக்கி றுனுங்க.

குப்பிப்பாலேக் கண்டால்வாயைக்
கடிக்கி றுனுங்க!

பட்டுச்சட்டை போட்டுவிட்டாப்
புடிச்சு இழுக்கிறுன்;

பலத்தைஎல்லாம் சேத்துக்கிட்டு
கிளிக்கப் பார்க்குறுன்!

கண்ணில்மையைத் தீட்டிவிட்டால்
கையால் கசக்குறுன்;

கண்டபடி முகத்திலெங்கும்
தேச்சுக் கொள்ளுறுன்!

என்னேக்கண்டால் முகத்தை அப்பால்
திருப்பிக் கொள்ளுறுன்;

எங்கள் அம்மா வந்தால் ரொம்பச்
சிரிச்சுக் கொள்ளுறுன்

உருண்டுபெரண்டு ரொம்பத்தொல்லே
செய்யி றுனுங்க.

'உப்புப்'பென்று உதட்டைக் குவிச்சு
ஊதுறுனுங்க.

சின்னப்பயல் தொல்லேரொம்பக்
கூடிப் போச்சுங்க.

செல்லம்கொடுத்து வளர்ப்பதாலே
இப்படி ஆச்சுங்க!

இன்னும் நாளு போனுப்பயல்
பெரியவ னுவான்!

செல்லம் எல்லாம் அப்புறம் வெத்திலேச்
செல்லம் தானுங்க!

# நீங்களும் நானும்

ஆர்வி

பி, கே. ராமன், சென்னை-1.

கே: அணுச் சக்தியால் இயங்கும் கடிகாரம் இப்பொழுது எங்கே இருக்கிறது?

ப: அமெரிக்க ராணுவ அதிகாரிகளிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 'அட்டாமிக்ரான்' என்பது அந்தக் கடிகாரத்தின் பெயர்.

டி. கே. பாண்டியன், திருப்புவனம்.

கே: மனித உடலில் மொத்தம் எத்தனை எலும்புகள் உள்ளன?

ப: நன்ருக வளர்ந்த மனிதனின் உடலில் மொத்தம் 206 எலும்புகள் இருக்கின்றனவாம். ஆனல் அவன் பிறக்கும்போது 270 எலும்புகள் இருக்கின்றன என்று சொல்லுகிருர்கள். அதாவது சில, வளர வளர ஒன்று சேர்ந்து விடுகின்றன.

ஜி. ராமகோபால், கல்கத்தா-29

கே: விலையுயர்ந்த மயிலாசனத்தைக் கட்டியவர் யார்? அது இப்போது எங்கே இருக்கிறது? அதன் விவரம் என்ன?

ப: உலகப் புகழ் பெற்ற இந்த மயிலாசனத்தை இடைவிடாமல் ஏழு வருஷகாலம் பாடுபட்டுத் தயாரித்தவர் ஷாஜஹான் சக்கரவர்த்தி. உலக அதிசயங்களில் ஒன்ருன தாஜ் மஹலைக் கட்டிய ஷாஜஹான்தான் கிட்டத்தட்ட ஒன்றேகால் டன் எடையுள்ள ரத்தினங்களைப் பதித்து இந்த மயிலாசனத்தையும் தயாரித்தார். பாவம்! அவர் அதிக நாள் இதில் அமர்ந்து அரசாளவில்லை. இந்தத் துரதிருஷ்டம் பிடித்த மயிலாசனத்தைக் கொள்ளைக்காரனுன பாரசீக சக்கரவர்த்தி நாதிர்ஷா அபகரித்துச் சென்ருனும். அவனும் பிறகு கொலையுண்டான். பின்னர் இது எப்படியோ 18-ஆம் நூற்ருண்டின் இறுதியில் பிரிட்டிஷார் கையில் சிக்கியதாக அறிகிருேம். கோஹினூர் வைரத்தைப் பிரிட்டிஷ் ராஜ மகுடத்தில் பதிக்கச் சீமைக்கு அனுப்பியதுபோல் இதையும் அவர்கள் ரகசியமாகக் கப்பலேற்றி அனுப்பி வைத்தார்கள். ஆனல் அவர்களும் கொடுத்து வைக்கவில்லை. அதை ஏற்றிச் சென்ற கப்பல் புயலில் சிக்கி, கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரையோரத்தில் உள்ள பாறைகளில் மோதி, இந்து மகா சமுத்திரத்தில் ஜல சமாதி ஆகிவிட்டது. இதைக் கண்டெடுக்கப் பதினுறு முறை முயன்றுவிட்டார்கள்; பலன்தான் இல்லை.

எம். ஏ. சலாம், சிங்கப்பூர்

கே: வீரம் மிக்க மைசூர் அரசர் ஹைதரும் திப்புவும் இந்துக்களின் விரோதிகளாகக் கருதப்படுகிருர்களா?

ப: இல்லை; நிச்சயமாக இல்லை. அது ஆங்கிலேயரின் கட்டுக் கதை என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. தேவனஹள்ளி என்ற இடம்தான் திப்புசுல்தான் பிறந்த ஊர். இந்த ஊர் ஆலயத்திலுள்ள மதன கோபால கிருஷ்ணனிடம் ஹைதருக்கு அசாத்திய பக்தியும் விசுவாசமும் உண்டாம். துங்கபத்திரைக் கரையிலே அமைந்திருக்கும் சிருங்கேரி (ஆதி சங்கரர் ஸ்தாபித்தவற்றுள் ஒன்ருன) மடத்துக்குப் பல சௌகரியங்களைச் செய்து தருமாறு இருவருமே தம் அதிகாரிகளுக்கு ஆணையிட்டு எழுதியிருக்கிருர்கள். அந்தக் கடிதங்கள் இன்றும் இருக்கின்றனவாம்.

க. ரா. கோபால், கல்கத்தா-29

கே: சென்னையிலுள்ள டாக்ஸி டிரைவர்களை நம்ப முடியுமா?

ப: ஊருக்குப் புதிதாக வருபவர்களை ஏமாற்றும் டாக்ஸி டிரைவர்கள் சென்னையில் மிக மிகக் குறைவு. உங்கள் ஊரில்தான் அதிகம் என்று எனக்குக் கேள்வி.

பி. வேலாயுதம், மாயூரம்

கே: விஞ்ஞானம் என்ருல் என்ன?

ப: இயற்கைத் தத்துவங்களில் மறைந்துள்ள உண்மைகளைக் கண்டு, அவற்றை ஒப்புநோக்கி, ஒழுங்கு படுத்தி, ஆராய்ந்து பார்த்துத் தெளிவதே விஞ்ஞானம் ஆகும்.

**ஆர். சுகந்தி, பங்களூர்-3**

கே: மூடனுக்கும் முட்டாளுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

ப: இரண்டும் ஒன்றுதான். முட்டாள் என்று ஆண் பெண் இருபாலரையும் பொதுவாகக் குறிக்கலாம். ஆனால் பெண்களை மட்டும் மூடம் என்றுதான் குறிக்க வேண்டியிருக்கிறது.

**சித. ராமநாதன், காரைக்குடி**

கே: பகுத்தறிவு பெருகியுள்ள இந்த நாளில் பிள்ளையாருக்கு அவல், கடலை, பொறி இவற்றைத் தருவதாகப் பாடல் புனைவது பொருந்துமா?

ப: இப்பொழுது பகுத்தறிவு பெருகியுள்ளதாகச் சொல்ல முடியாது. பகுத்தறிவே யில்லாத, பகுத்தறிவையே பயன்படுத்தத் தெரியாத, பேசிப் பொழுதுபோக்கும் சோம்பேறிகள் கூட்டம்தான் பெருகியிருக்கிறது. இறைவனை மிக எளிய மலரான தும்பைப் பூவினாலும் அர்ச்சிக்கலாம்; ஒரு நயா பைசாவுக்கு அவல் வைத்தும் படைக்கலாம். உள்ளத்திலே அன்பும் பக்தியும் இருக்க வேண்டும் என்பதே முக்கியம். அதைத்தான் குறிப்பிடுகிறது அந்தப் பாடல். இறைவன் எல்லாருக்கும் எளியவனாக இருக்கிறான் என்பதே நம்முடைய நம்பிக்கை.

**எஸ். செல்லம், மதுரை**

கே: பெண்களின் சிறப்பு என்ன?

ப: இரண்டு உண்டு. கல்யாணத்துக்கு முன்பும் அவர்களைப் புரிந்து கொள்ள முடிவதில்லை; கல்யாணமான பிறகும் அப்படியே. இது சிறப்போ என்னவோ எனக்குத் தெரியாது.

**ஆர். கந்தசாமி, திருச்சி-3**

கே: எண்ணெய் ஸ்நானம் செய்வதால் என்ன நன்மை?

ப: உடம்பிலுள்ள உஷ்ணம் தணிந்து, கண் பார்வை தெளிவாகும் என்று அநுபமுள்ளவர்கள் கருதுகிறார்கள்.

**சுபாஷ்சந்திரன், மதுரை**

கே: சுதந்தர நாட்டின் குறிக்கோள் என்ன?

ப: மனிதனை, மனிதனாகச் செய்து, மதித்து, மனிதனாக வாழவிடுவதுதான்.

**ஸி. கே. தண்டாயுதபாணி, கோவை**

கே: நான் இறைவனைக் காண விரும்புகிறேன். அதற்கு என்ன வழி?

ப: பூ! இதுதானா பிரமாதம்? பூவின் புன்சிரிப்பில்கூட அவனைக் காணலாமே!

**மா. பாலசுப்பிரமணியன், விழுப்புரம்**

கே: எனக்கும் என் நண்பனுக்கும் அடிக்கடி சண்டை வருகிறது. இதை எப்படித் தடுப்பது?

ப: ஒருவர் புத்திசாலியாக இருந்தாலும் போதுமே; இருவர் ஆனந்தமாக இருக்க!

**த. அருணாசலம், திருவள்ளூர்**

கே: எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றி பெற வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?

ப: வெற்றி தரக் கூடிய காரியங்களையே எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ஆர். தேவராசன், பள்ளிகொண்டா**

கே: நம்முடைய எண்ணங்கள் எல்லாம் எங்கே உண்டாகின்றன?

ப: நெற்றிப் புருவ மத்தியில். வெளிப்புறத்தில் அல்ல; உட்புறத்தில் உள்ள மூளைப் பகுதியில்.

**க, இரத்தினசிங்கம், சினிநோச்சி**

கே: கள்ளமில்லாத உள்ளத்தை அறிவது எப்படி?

ப: கண்களைப் பார். உள்ளத்தின் கண்ணாடி ஜன்னல் கண்கள்தான்!

**ஆர். சேகர், நார்வுட்**

கே: தற்சமயம் கண்ணன் எத்தனை பிரதிகள் விற்பனையாகின்றன? எத்தனை பிரதிகள் விற்பனையானால் அதை வாரப்பத்திரிகையாக ஆக்குவீர்கள்?

ப: இப்பொழுது சுமார் பதினைந்தாயிரம் பிரதிகள் விற்பனையாகின்றன. இது போதாது. இருபதினாயிரமாவது ஆனால் நிச்சயம் அதை வாரப் பத்திரிகையாக மாற்றிவிடுவோம்.

**க. இந்திரகுமார், யாழ்ப்பாணம்**

கே: கலித்தொகை பாடியவர் யார்?

ப: ஒருவரல்ல; பலர். பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணைகளைப்பற்றிப் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பே கலித்தொகை.

எம். கே. ராமகிருஷ்ணன், மேலத் தாங்கல்

கே: முதன் முதலில் மன்னர் ஆட்சி யாரால், எங்கே ஏற்படுத்தப் பட்டது?

ப: சீனரோ, கிரேக்கரோ, எகிப்தியரோ, ரோமரோ, பாரசீகரோ, அராபியரோ; ஆங்கிலேயரோ மன்னராட்சியை நிறுவுவதற்குமுன் இந்தியரே அதைஏற்படுத்தினுர்கள்.

கா. சண்முகம், சிவரக்கோட்டை

கே: மொஹஞ்சோதாரோ, ஹரப்பா என்ற நகர நாகரிகங்களைக் கண்டவர் யார்?

ப: ஸர் ஜான் மார்ஷல் என்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளரே இந்தச் சிந்துவெளி நாகரிகத்தை உலகுக்கு எடுத்துக் காட்டியவர். சிந்துவெளியில் மண்ணோடு மண்ணுகப் புதைந்து மறைந்திருந்த இந்தப் பழைய நாகரிக நகரங்களை இவர் இந்தியாவின் தொல்பொருள் இலாகாவின் டைரக்டர் ஜெனரலாக இருந்தபோது 1924-இல் கண்டுபிடித்தார். சமீபகாலத் தொல் பொருள் ஆராச்சிகளிலேயே இது மிகப் பெரிய சாதனை என்று உலகமே புகழ்ந்தது. இவர் சமீபத்தில்தான் காலமானுர்.

எஸ். வி. ஜகதீசன், வேப்பேரி

கே: மௌனமாய் இருப்பது எதைக் குறிக்கிறது?

ப: அறியாமையைக் குறிக்கிறது. அதாவது பெரும்பாலும் பிறருடைய அறியாமையைத்தான்.

கே. வி. சீதாலக்ஷ்மி, கல்கத்தா

கே: தற்போது இந்தியாவிலுள்ள சிறந்த தத்துவஞானி யார்?

ப: இந்தியாவின் உப ஜனுதிபதி ஸர். ராதாகிருஷ்ணனைத்தான் தத்துவஞானி என்று உலகம் கூறுகிறது. ஆனுல் அவரும் உலக குருவென மதித்து வணங்கி அறிவொளி பெறத் தக்க ஒருவர் இன்று தென்னுட்டில் இருக்கிருர்.

சி. கு. சுப்பிரமணியன், மதுரை

கே: ஊழைச் சதை போட்டிருப்பதற்கு என்ன செய்யலாம்?

ப: அடிக்கடி உண்ணுவிரதம் இருக்கலாம். ஊளைச் சதையை எதிர்த்து, 'ஊளைச்சதை கரையும் வரையில் உண்ணு விரதம்' என்று ஒரு போர்டும் எதிரே போட்டுக் கொணடால்புதுமையாகஇருக்கும்.

மு. அபூபக்கர், கொழும்பு-13

கே: இன்று உலகிலேயே பெரிய நகரம் எது? இரண்டாவது மூன்றுவது நகரங்கள் எவை?

ப: உலகிலேயே பெரிய நகரம் நியூயார்க், அடுத்தது டோக்கியோ, மூன்றுவதாக வருகிறது லண்டன். நியூயார்க்கின் ஜனத்தொகை 78 லட்சம்; டோக்கியோவின் ஜனத்தொகை 72 லட்சம். லண்டனின் ஜனத்தொகை 71 லட்சம்.

ஆர். பத்மாஸனி, பங்களூர்-3

கே: உங்களுக்குப் பிடித்த பழமொழிகளில் ஒன்றைக் கூறுங்கள்.

ப: 'மாடு இருக்கிறது என்று தவிட்டைக் கொடுத்தால், பச்சைப் பிள்ளை இருக்கிறது என்று பசும் பாலைக் கொடுப்பார்கள்'—என்பது ஒரு பழமொழி; வழக்கில் உள்ள அழகான கருத்துள்ள மொழி.

து. ரத்தினசாமி, திருப்பூர்

கே: எனக்கு நல்ல நடிப்புத் திறமை இருக்கிறது. படிப்பு ஏற வில்லை. என்ன செய்வது? நடிப்புக் கலை வளர்க்கும் படிப்புக்கு நாட்டிலே வழியில்லையே!

ப: நடிப்பிலே நாட்டம் இருந்தால் நடிகனுக முயல்வதே சரி, ஆனுல் நடிப்பும் ஒரு படிப்புதான்; நடிப்புக்குப் படிப்புத் தடையாக இருப்பதற்கு இல்லை. படிக்க வேண்டிய வயதில் படிக்காமல் போய்விட்டால் பின்னுல் நடிப்பிலும் வளர்ச்சிக்கு வழியில்லாமல் போய்விடும். ஆகவே நன்றுகப்படி. ஆனுல் படிப்பதுபோல் மட்டும் நடிக்காதே.

ச. இரத்தினம், மதவநாயக்கனூர்

கே: பால், தயிர் இவற்றில் எது மிகச் சிறந்த உணவு?

ப: பால்தான்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.



# கண்ணன்

## வெளியீடுகள்

| | | | ரூ. ந. பைசா |
|---|---|---|---|
| 1. | தங்க மாம்பழம் | ராஜி | 2·00 |
| 2. | லீடர் மணி | ஆர்வி | 1·50 |
| 3. | சைனா சு-சூ | ஆர்வி | 1.50 |
| 4. | ஜிம்மி | பெ. தூரன் | 1·50 |
| 5. | சந்திரகிரிக் கோட்டை | ஜனா | 1·25 |
| 6. | அசட்டுப் பிச்சு | ஆர்வி | 1·00 |
| 7. | மஞ்சள் பங்களா | ஜி. ஜயராமன் | 1·00 |
| 8. | சின்ன ராஜா | வாசகன் | 0·75 |
| 9. | பவழவல்லி | கி. ரா. | 0·75 |
| 10. | கவிஞர் கதை | கி. வா. ஜ. | 0·62 |
| 11. | விளையும் பயிர் | கி. வா. ஜ. | 0·50 |
| 12. | சமர்த்து மைனா | தி. ஜ. ர. | 0·50 |
| 13. | அபாயச் சங்கு | நீலம் | 0·50 |
| 14. | ஜக்கு | ஆர்வி | 0·50 |
| 15. | ஜம்பு | ஆர்வி | 0.50 |
| 16. | ஏரிக்கரை மாளிகை | ஜனா | 0·50 |
| 17. | மின்னல் அரக்கன் | ஜனா | 0·50 |
| 18. | ராஜாவும் குருவியும் | சோமசன்மா | 0·50 |
| 19. | கழுகும் கிளியும் | சோமசன்மா | 0·50 |
| 20. | தவளையும் காளையும் | சோமசன்மா | 0·50 |
| 21. | விஞ்ஞானம் பேசுகிறார் | பெ. நா. அ. | 0·50 |
| 22. | புலிக் குட்டி | ஆர்வி: ஸாமி | 0·40 |
| 23. | பாரஸீக ரோஜா | ஆர்வி: ஸாமி | 0·32 |
| 24. | தூங்கும் அழகி | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 25. | குளிகைத் தீவு | ஆர்வி: சங்கர் | 0·25 |
| 26. | மாஸ்டர் பாலகுமார் | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 27. | நீச்சல் பழக்கம் | டிமான்ஸ்டிரேட்டர் | 0·20 |
| 28. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் | எஸ். ஜே. | 0·20 |
| 29. | கோழி விதைத்த நெல் | சூடாமணி | 0·20 |
| 30. | தங்கத்தின் பந்து | சூடாமணி | 0·20 |
| 31. | என் பேர் என்ன? | சூடாமணி | 0·20 |

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் இவை.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4.**

(Regd as a Newspaper in Ceylon) Regd. No. M. 554



தயாராகிறது!

# கண்ணன்
# தீபாவளி மலர்
# 1958

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தான

## கண்ணன் மலர்

**வாணங்களைவிட வண்ண ஜாலம் மிகுந்தது!**
**வெடிகளைவிட வேடிக்கைகள் நிறைந்தது!**
**புத்தாடைகளைவிடப் புதுமைகள் கொண்டது!**

அறிஞர்களுடைய கதைகள், தலைசிறந்த எழுத்தாளர்களுடைய எழுத்தோவியங்கள், பரிசு பெற்றவர்களின் சித்திரங்கள், கதைகள், கவிதைகள், கட்டுரைகள் முதலியவற்றோடு பொழுதுபோக்குக்குரிய பல அம்சங்களும் அறிவு வளர்ச்சிக்கான பல பகுதிகளும்கொண்டு உருவாகிவருகிறது

உங்கள் பிரதிக்கு இப்போதே முந்திக்கொள்ளுங்கள்



**கண்ணன் காரியாலயம்**
மயிலாப்பூர் :: சென்னை-4

**விலை**
**1 ரூபாய்**

தபாற்பெட்டி நெ. 804. மயிலாப்பூர். சென்னை 4.